# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 17 செவ்வாய்க்கிழமை (29-02-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:81

# 4 யுத்தக் கைதிகளை புலிகள் விடுவித்தனர்

## பிரபாவின் மனிதாபிமான பணிப்பின் பேரில் விடுதலை

வவுனியா.பெப்.29

"தமிழீழ தேசியத் தலைவரின் மனிதாபிமானப் பணிப்பிற்கமைய நான்கு சிங்கள யுத்தக்கைதிகள் விடுதலைப் புலிகளால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்" என்று 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

யுத்தக் கைதிகளைப் பார்வையிடுவதற்காக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு சென்ற அவர்களது உறவினர்களின் கோரிக்கையை அடுத்து புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் உத்தரவின் பேரில் இவர்கள் விடுவிக்கப்பட்டதாக மேலும் அறிவிக்கப்பட்டது.

கைதிகளை விடுதலை செய்தமைக்காக புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு கைதிகளும் அவர்களது உறவினர்களும் தமது நன்றிகளைத் தெரிவித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-6-8)

## ஆறு ஆண்டு காலம் காவலில் இருந்தவர்கள்

**வவுனியா,பெப்ரவரி 29**

**தமது காவலில் உள்ள 15 யுத்தக் கைதிகளில் நான்கு பேரை விடுதலைப் புலிகள் நேற்று விடுவித்தனர்.**

**புலிகளின் காவலில் ஆறு ஆண்டு காலம் இருந்த இவர்கள் நால்வரும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரால் நேற்று மாலை வவுனியாவுக்குக் கூட்டிவரப்பட்டனர்.**

கடற்படையைச் சேர்ந்த ஒருவரும் இராணுவத்தைச் சேர்ந்த மூவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு:-

★ சமரக்கோன் முதியான்சலாகே பகலகெதர அனுரா காலித பண்டார (பொலநறுவை)

★ ராஜபக்ஷ தேவலாகே மாலித சிறிநாக ரூபசிங்க (பதுளை)

★ ஹேரத் முதியான்சலாகே ரண்பண்டா நலித ஸ்ரீநாக (குருநாகல்)

(மூவரும் 1993 நவம்பர் 12, 13 ஆம் திகதிகளில் பூநகரியில் பிடிபட்டவர்கள்)

★ நம்புவாசம் எப்பிட்டாகடுவ ககோக விஜித (கம்பஹா - 1994 செப்ரெம்பர் 20ஆம் திகதி 'சாகரவர்த்தன' கப்பல் தகர்ப்பின் போது கைது செய்யப்பட்டவர், கப்பல் களஞ்சியப் பொறுப்பாளர்)

நேற்று நண்பகல் 11.30 மணியளவில் மல்லாவியில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளின் முன்னிலையில் இந்த 4

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஏனைய கைதிகளை விடுவிப்பதற்கு அரசு முயலாவிட்டால் போராட்டம்

### படையினரின் பெற்றோர் சங்கம் எச்சரிக்கை

வன்னியில் புலிகளின் காவலில் உள்ள ஏனைய யுத்தக்கைதிகளை விடுவிக்க அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிடின் நாடளாவிய போராட்டங்கள் நடத்தப்படும்.

காணாமற்போன படையினரின் பெற்றோர் - பாதுகாவலர் சங்கத் தலைவர் ஈ.பி.நாணயக்கார நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

தமது விடுதலைக்கு நடவடிக்கை எடுக்கக்கோரி உண்ணாவிரதம் இருந்தவர்களில் நான்கு பேரை தற்போது புலிகள் விடுவித்துள்ளனர்.

ஏனையவர்களை விடுவிக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் தவறின் எமது சங்கம் உட்பட 15 பொது அமைப்புகள் ஒன்றிணைந்து போராட்டங்களை நடத்த முடிவு செய்துள்ளன என்றும் அவர் மேலும் கூறினார். (உ-6)

## பேச்சு நடத்தும்படி வற்புறுத்தி மட்டக்களப்பில் நேற்றுப் பேரணி

### தமிழ்க் கட்சிகள் இணைந்து ஏற்பாடு

மட்டக்களப்பு,பெப்.29

நோர்வே அரசாங்கத்தின் மத்தியஸ்தத்துடன் அரசாங்கமும் - விடுதலைப் புலிகளும் உடனடியாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவேண்டுமெனக் கோரியும் -

நோர்வே அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளைக் குழப்பமுற்பட்டிருக்கும் 'வீரவிதான', 'பூமிபுத்திர' உட்பட சிங்கள பேரினவாத அமைப்புகளின் செயலைக் கண்டித்தும -

மட்டக்களப்பு நகரில் நேற்று ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு நகரப்பகுதியில் - அரசடிச்சந்தியில் இருந்து நேற்றுக்காலை ஆரம்பித்த ஆர்ப்பாட்டப் பேரணி காந்திசிலை வரை இடம்பெற்றது. சுமார் 2ஆயிரம் பேர் இதில் கலந்துகொண்டனர்.

ஓட்டோக்கள், மாட்டுவண்டில்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட வாகனங்களும் பேரணியில் கலந்து கொண்டன.

பேரணியின் இறுதியில் காந்தி சிலையடியில் பொதுக்கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது.

இதில் பேரணியை ஒழுங்கு செய்த ரெலோ, ஈ.பி.டி.பி. மற்றும் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்புக்களின் பிரதிநிதிகளும், சர்வமதத் தலைவர்களும் உரையாற்றினர்.

பொதுக்கூட்டத்தைத் தொடர்ந்து மேற்படி தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்குச் சென்று அரசஅதிபர் ஏ.கே.பத்மநாதனிடம் ஜனாதிபதிக்கு முகவரியிட்ட மகஜரைச் சமர்ப்பித்தனர்.

தொடர்ந்து செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, திருகோணமலை - மட்டக்களப்பு ஆயர் வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோரிடமும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

(மகஜரின் விபரம் 11ஆம் பக்கத்தில்) (உ-7-21)

### ஒன்பது பேர் இதுவரை கைது

கொழும்பு,பெப்.29

கடந்த டிசெம்பரில் கொழும்பு மாநகரசபை மைதானத்தில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது இடம்பெற்ற குண்டுவெடிப்பு தொடர்பாக இதுவரை ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குண்டுவெடிப்புத் தொடர்பான நீதிமன்ற விசாரணை நேற்று இடம்பெற்றபோது இரகசியப்பொலீஸ் அத்தியட்சகர் டி.எச்.ஐ.அமரதுங்க அங்கு இவ்வாறு தகவல் வெளியிட்டார்.

குண்டை வவுனியாவிலிருந்து கொழும்புக்கு கொண்டுவந்தாக கருதப்படுபவரின் மனைவியான வசந்தி என்ற பெண்ணும் சம்பவத்துக்கு ஒரு வாரம் முன்னதாக கொழும்பு நிலைமை குறித்து வவுனியாவுக்கு தகவல் கொடுத்ததாகக் கூறப்படும் இராசையா தேன்மொழி என்பவரும் கைதுசெய்யப்பட்டவர்களில் அடங்குவர் என்றும் அவர் சொன்னார். (உ-6)

### கிளைமோர் தாக்குதல்

## புல்மோட்டை வீதியில் இரு கடற்படையினர் பலி!

திருகோணமலை - புல்மோட்டை வீதியில் உள்ள இறக்கண்டிப் பகுதியில் விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை 10.30மணியளவில் நடத்திய கிளைமோர் குண்டுத்தாக்குதலில் 2 கடற்படையினர் உயிரிழந்தனர்; மேலும் 4 பேர் காயமடைந்தனர்.

டிராக்டர் ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த படையினரை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதலை அடுத்து படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நிலாவெளி வைத்திலிங்கப் பிள்ளையார் ஆலய பூசகர் காயமடைந்தார். அவர் உடனடியாக திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

காயமடைந்த கடற்படையினர் திருகோணமலை கடற்படை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து நிலாவெளி - திருகோணமலை வீதியில் ஒரு மணி நேரமாக போக்குவரத்துத் தடைசெய்யப்பட்டிருந்தது. (உ-6-150)

## தோட்ட வீடமைப்புத்துறை ஆறுமுகம் தொண்டமானிடம்!

கால்நடை அபிவிருத்தி தோட்ட உள்கட்டமைப்பு அமைச்சரான ஆறுமுகம் தொண்டமானுக்கு புதிதாக தோட்ட வீடமைப்புத்துறையும் வழங்கப்பட்டுள்ளது. இந்த மாதம் 2 ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் ஜனாதிபதி புதிய துறையையும் அமைச்சருக்கு ஒதுக்கியுள்ளார்.

வீடமைப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் கீழேயே இதுவரை காலமும் தோட்ட வீடமைப்புத்துறை இருந்து வந்தது. (உ-6)

### குடாக்கடலில் இருந்து

## தம் உபகரணங்களை மீனவர்கள் மீட்டனர்

குருநகர்,பெப்.29

குடாக்கடல் பகுதியில் கடந்த சில மாதங்களாக கைவிடப்பட்டிருந்த மீன்பிடி வலைகள், கம்புகளை எடுத்துவர படையினர் நேற்று அனுமதி வழங்கியதை அடுத்து குருநகர் மீனவர்கள் நேற்று தமது உபகரணங்களை மீட்டனர்.

இதனை அடுத்து குருநகர் இறங்குதுறையில் இருந்து கிழக்குப்பக்கமாக - வெளிச்சக்கட்டைக்குள் அடங்கும் பகுதியில் உள்ள-

கைவிடப்பட்ட மீன்பிடி உபகரணங்களை எடுத்துவர குருநகரைச் சேர்ந்த மீனவர்களின் சுமார் 15 வள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சேதமடைந்த நிலையிலேயே மீனவர் உபகரணங்கள் மீட்பு

குருநகர்.பெப்.29

குடாக்கடல் பகுதியில் நேற்று மீட்கப்பட்ட மீன்பிடி வலைகள், கம்புகள் என்பன மிகவும் அழிவுற்றுக் காணப்பட்டதாக குருநகர் மீனவர்கள் தெரிவித்தனர்.

பட்டிவலைகள் பிய்ந்தும். கம்புகளில் அலசு பிடித்து முறிவடைந்தும் காணப்பட்டதாகவும் மீனவர்கள் குறிப்பிட்டனர்.

கடலில் மீட்கப்பட்ட வலைகளையும், கம்புகளையும் மீனவர்கள் வண்டில்களில் தமது இருப்பிடங்களுக்கு ஏற்றிச் சென்றதைக் காண முடிந்ததாக குருநகர்ச் செய்திகள் தெரிவித்தன.

படையினரின் அனுமதி கிடைக்கும் பட்சத்தில் மீனவர்கள் இன்றும் கடலுக்குச் சென்று தமது உபகரணங்களை எடுத்து வருவர் எனவும்- தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நாளை புதன் கிழமை முதல் குருநகர் மீனவர்கள் குடாக்கடலில் மீன்பிடித்தலில் ஈடுபடுவர் என ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வி.கே. ஜெகன் நேற்றிரவு தெரிவித்தார்.

## கப்பலில் செல்பவர்களை இன்று வருமாறு அழைப்பு

'லங்கா முடித்த' கப்பல் மூலம் திருகோணமலைக்குச் செல்ல விரும்பும் பயணிகள் சகல ஆயத்தங்களுடனும் பயணத்துக்குத் தயாராக இன்று நண்பகல் 11.30 மணிக்கு யாழ். மூன்றாம் குறுக்குத் தெருவில் உள்ள சிவில் நிர்வாகக் காரியாலயத்துக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

பயணிகளுக்கு ரிக்கெட் விநியோகிக்கும் பணி இன்றும் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சொந்த இடங்களுக்குத் திரும்பும் 70 அகதிகள் உட்பட ஆயிரத்து நூறு பயணிகளுடன் திருகோணமலையிலிருந்து இன்று காங்கேசன் வந்து சேரும் 'லங்கா முடித்த' இங்கிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு திருகோணமலை திரும்பும். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# INTERNET, E-MAIL சேவை

பொது மக்களின் பாவனைக்கு

Internet பாவனை
அறிமுகக் காலமான மார்ச் மாதம் மட்டும்
மணித்தியாலத்திற்கு ரூபா 500/=

*Internet* சேவை

சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாள்களில்
காலை 9.00 - மாலை 5.00
வேலை நாள்களில் காலை 6.00 - 8.00

குறிப்பு :- பயிற்சி பெற விரும்புவோரும்
இச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தலாம்

*e-mail* சேவை

கிழமை நாள்களில் காலை 9.00- பி.ப 4.30

T.P. No :- 2416
e-mail :- trro@dimond.lanka.net

T.R.R.O COMPUTER TRAINING CENTRE

106, 4 TH Cross Street,
Jaffna. (C/11240)


## 'பிக் - அப்' வாகனங்கள்

யாழ்மாவட்டத்தில் மலேரியா தடுப்பு நடவடிக்கைகளுக்காக இரு பிக் - அப் வாகனங்கள் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்படவுள்ளன. மலேரியா தடுப்பு நடவடிக்கைகளை துரிதப் படுத்தப்படும் நோக்குடன் இந்த வாகனங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன. (உ-5-9)

# மெய்வன்மைப் போட்டிகள்

உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 1.45 மணிக்கு அதிபர் திருமதி அ.இ.குமாரசாமி தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்விற்கு வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் வீ.பாலசிங்கம் பிரதமவிருந்தினராகவும், கிராமசேவையாளர் செ.றோ. யேசுபாலன், வைத்திய கலாநிதி நா.சக்திவடிவேல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி ம.செபஸ்தியாம்பிள்ளை கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

* * *

உடுவில் அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் சி.லோகேஸ்வரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

வலிகாமம் கல்விவலய முகாமைத்துவ உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் பிரதமவிருந்தினராகவும், சுன்னாகம் பிரதேசசபை செயலர் பி.வி.பாலசுப்பிரமணியம் சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொள்வர்.

திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் க. ஜெயானந்தன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் நல்லூர் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. ச.காங்கேயன் பிரதமவிருந்தினராகவும், வைத்தியகலாநிதி செல்வி ப.சின்னப்பா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

பரிசளிப்பின் போது 1998இல் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு நிதிவெகுமதியும், 1999 இல் சித்திபெற்ற தரம் ஐந்து மாணவர்களுக்குப் பாராட்டும் வெற்றிக் கிண்ணங்களும் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

* * *

நாவற்குழி மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திரு.பி.முத்துலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

முதன்மை விருந்தினராக யாழ் மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளர் திரு.சி.நடராசா கலந்து கொள்வார். (உ-133)

(12 ஆம் பக்கம் பார்க்க)

## NOTICE

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

FACULTY OF MEDICINE

COMMENCEMENT OF PARA-CLINICAL LECTURES FOR THE 19 TH BATCH

The Para - Clinical Lectures for the 1996 Batch (19th) Will commence on 20 March 2000.

*Dr.K.Kunarasa,*
*Registrar.*
2000.02.17 (C/11232)

## அறுபதாவது அகவை வாழ்த்துக்கள்

எமது துறைத்தலைவர்

*கலாநிதி சபா ஜெயராசா*

அவர்கள் அறுபதாவது அகவை எய்தியதையிட்டு அவரை மனமார வாழ்த்துகின்றோம். மேலும் எமது துறைக்கு அவரது சேவை பெருக இறைவனை வேண்டுகின்றோம்.

மருதனார்மடம். (74068)

இராமநாதன் நுண்கலைக்கழக,
நடனத்துறை விரிவுரையாளர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளர்
(கணக்காய்வு)
திருமதி கோமளா திருநாவுக்கரசு
அவர்களின் அன்பு மகன்

### திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் அகாலமறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய மனதார இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
வலி.கிழக்கு தென்பகுதி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
நீர்வேலி.
(C/11225)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர்
(கணக்காய்வு)
திருமதி கோமளா திருநாவுக்கரசு
அவர்களின் பாசமிகு மகன்

### திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் அகாலமரணச் செய்தி கேள்வியுற்று ஆற்றொணாத் துயரமடைகின்றோம். பாசமிகு மைந்தன் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா நற்சாந்தி பெற இறைவனை மனதார இறைஞ்சுகின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,
*தென்மராட்சி மேற்கு.*
*பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.*
*கைதடி.*
(C/11235)


## ராஜா

யாழ்ப்பாணம்
சரத்குமார், தேவயாணி
நடித்த
**சூர்யவம்சம்**
காட்சிகள்
10.30, 2.30
(C/11156)

## நாகம்ஸ்

சுன்னாகம்
அர்ஜுன்,ரேவதி,
பிரகாஷ்ராஜ்,வடிவேலு
நடித்த
**சுபாஸ்**
(ரீலீஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
(C/11176)

## லிபேட்டி

அச்சுவேலி
புதிய வெளியீடு
பிரபு, கார்த்திக்
நடித்த
**தை பொறந்தாச்சு**
காட்சிகள் 10.30, 2.30
T.P:- 070 - 212223
070 - 212678
(73866)

*குளிர்மையின் மறுபெயர்!*

# NIPPON

இலங்கையில்
அதிகூடிய தெரிவு 30ற்கும்
மேற்பட்ட மாதிரிகள்!

மின்விசிறிகள்

- TABLE FANS
- CEILING FANS
- STAND FANS
- BOX FANS
- EXHAUST FANS
- WALL FANS
- ORBIT FANS
- AIR COOLING FANS, ETC.ETC

LANKA NIPPON
'தரத்தின் சின்னம்'

No.18,Keyzser Street, Colombo - 11
T.P:- 437735 Fax:-437736
No.10, Trelawny Place (Behind Milk Bar)
Bambalapitiya Junc., Colombo- 04 Tel: 589992.
(சி-10982)


## யாழ்.மத்திய கல்லூரி

(தேசிய பாடசாலை)

### மெய்வல்லுநர் போட்டி

### ஒத்திவைத்தல்

இன்று (29.02.2000) செவ்வாயன்று நடைபெறவிருந்த கல்லூரியின் ஆரம்பப் பிரிவின் மெய்வல்லுநர் போட்டியும் நாளை (01.03.2000) புதன்கிழமை நடைபெறவிருந்த இடைநிலைப் பிரிவின் மெய்வல்லுநர் போட்டியும் சீரற்ற வானிலை காரணமாக மறுஅறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

(C/11239) *- அதிபர் -*

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசதுரை சிவஞானம்

(ராஜா ஸ்ரோர்ஸ் - ஓட்டுசுட்டான்)

காரைநகர் மாப்பாணவூரியைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இராசதுரையின் அன்பு மனைவியும் சிதம்பரப்பிள்ளையின் மகளுமாகிய திருமதி இராசதுரை சிவஞானம் 28.01.2000 அன்று ஒட்டுசுட்டானில் காலமாகிவிட்டார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

90, சம்பியன் லேன்,
கொக்குவில். (74066)

தகவல்:
சி.சிவலிங்கம்
(சகோதரன்)

### வைத்திலிங்கம் விசுவலிங்கம்

(சமாதான நீதிவான் - நயினாதீவு)

நயினாதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் நயினை நாகபூஷணி அம்மன் ஆலய ஆதீனகர்த்தா காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் மகனாருமான விசுவலிங்கம் நேற்று (28.02.2000) திங்கட்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் வேலணைக் கல்விக்கோட்ட இளைப்பாறிய நிர்வாக அதிகாரியும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - தில்லைவனம் ஆகியோரின் மகனும் காலஞ்சென்ற கதிரேசு - கண்மணி ஆகியோரின் மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான நடராசா, செல்லத்துரை, இராசம்மா, கணபதிப்பிள்ளை, செல்லம்மா, கார்த்திகேசு, கதிரேசு கந்தையா, நாராணபிள்ளை மற்றும் சிவபாக்கியம், சிவகாமி, இராசரத்தினம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற பெரியநாயகி மற்றும் தில்லைநாயகி, அன்னலட்சுமி, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.02.2000) செவ்வாய்கிழமை நயினாதீவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6 ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (74070)

தகவல்:
திருமதி. சிவபாக்கியம்
(மனைவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில்

# அதிகாரப் பரவலாக்கல் அமைய வேண்டும்

## ஜோசப் பரராஜசிங்கம் கூறுகின்றார்

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுக்கப்படும் எந்தவொரு முயற்சியிலும் இந்தப் பிரச்சினையில் முக்கிய பங்காளியான தமிழீழ விடுதலைப்புலிகளும் இணைக்கப்பட வேண்டும். அரசமைப்புத் தொடர்பாக அவர்களுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையிலாவது முதலில் இணக்க நிலை ஏற்படவேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசுக்கு எடுத்துக்கூறி குரல் கொடுத்து வருபவர்களில் இவரும் ஒருவர்.

கொழும்பில் வைத்து அவர் வழங்கிய செவ்வி வருமாறு:-

### வெற்றி அளிக்கும் வாய்ப்புக்குறைவு

கேள்வி:- தற்போதுள்ள நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளனவா?

பதில்:- அதிகாரப்பரவலாக்கல் தொடர்பாக தற்

செவ்வி கண்டவர்
**மாவை குகன்**

சமயம் இடம்பெற்று வரும் பேச்சுக்களில் முன்னேற்றம் உண்டு என்று என்னால் கூற முடியாது. பேச்சுக்கள் வெற்றி அளிக்கும் என்றும் கூறமுடியாதுள்ளது.

கடந்த காலத்தைச் சற்றுப் பின்னோக்கிப் பார்த்தால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாமைக்கு முக்கிய காரணம் இந்த நாட்டில் உள்ள பேரினவாதக் கட்சிகள் என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஒரு கட்சி பிரச்சினைக்குத் தீர்வு காண முயலும். மற்றக் கட்சியோ அதற்கு மாறாகச் செயற்படும். இந்த நிலை காரணமாகவே தமிழர் பிரச்சினை தீர்க்கப்படாத நிலையில் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இன்றும் அதே நிலையைத்தான் காண முடிகின்றது. பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தீர்வுகாண முயல்கின்றது. ஆனால் ஐ.தே.க. அதற்கு எதிராகச் செயற்படுகின்றது.

நாட்டின் முக்கிய தேசியப் பிரச்சினையான இனப் பிரச்சினைக்கு இரு பெரும் கட்சிகளும் இணைந்து தீர்வுகாண முன்வரவேண்டியது அவசியம் ஆகும்.

# அரசின் தீர்வு யோசனைகள் வெற்றி பெறும் வாய்ப்பு இல்லை

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்னர் இந்தியா தலையிட்டது; ஆனால் அது தோல்வியில் முடிந்தது. இந்தப் பிரச்சினையில் இன்று நோர்வே தலையிட்டுள்ளது

தமிழர் பிரச்சினைக்கு நாட்டுக்குள் தீர்வு காண முடியாது என்பதையே இந்த மூன்றாந் தரப்பு மத்தியஸ்தம் காட்டுகின்றது. எனவே நோர்வேயின் நல்லெண்ண முயற்சியைப் பயன்படுத்தித் தீர்வுகாண இரு கட்சிகளும் முன்வர வேண்டும்.

ஒரு வருட காலத்துக்குள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. அரசிடம் ஆள், ஆயுத பலம் குறைந்து போகும் இந்த நிலையில் அரசியல் ரீதியான தீர்வைக்காண அரசு முன்வர வேண்டும்.

யுத்தம் மூலம் அல்ல; வெளிநாட்டு அழுத்தங்கள் மூலம் பேசித்தான் இதற்குத் தீர்வு காண வேண்டும் என்ற சூழ்நிலை தற்சமயம் உருவாகியுள்ளது.

வெளிநாட்டு அழுத்தம் காரணமாக அரசு மட்டுமல்ல விடுதலைப்புலிகளும் பேச்சுக்களில் பங்குபற்றும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இந்தச்சூழ்நிலை தொடர வேண்டும் என்பதே சகலரின் விருப்பம் ஆகும்.

### ஆரம்ப முயற்சி நன்றாக உள்ளது

கேள்வி; பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கூட்டுக் குழுவுக்கும் தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெறும் கலந்துரையாடல்களின் முன்னேற்றம் குறித்து...?

பதில்: அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக அரசு முன்வைத்துள்ள யோசனைகள் தொடர்பான ஆரம்ப முயற்சிகள் நன்றாக நடைபெறுகின்றன. இருதரப்புக்கும் இடையில் விட்டுக் கொடுக்கும் நிலை காணப்படுகின்றது. எனினும் அரசின் யோசனைகளில் முழுமையானவற்றில் இணக்கம் ஏற்படும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை.

தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய முக்கிய விடயங்கள் குறித்து இன்னும் கலந்துரையாடப்படவில்லை. முக்கியமான விவகாரமான வடக்கு — கிழக்கு அலகு இன்னும் ஆராயப்படவில்லை. அது தொடர்பான விடயம் வரும் போதுதான் அரசின் அதிகாரப்பரவலாக்கலின் எதிர்காலம் குறித்து முடிவு செய்ய முடியும்.

இந்த அலகு விடயத்தில் தமிழ்க்கட்சிகள் யாவும் ஒரே கருத்துடன் தான் உள்ளன. உறுதியாகவும் உள்ளன.

திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் அதாவது, தேசிய இனம், தாயகக் கோட்பாடு, சுயமாக இயங்கல் ஆகியவற்றைப் பிரதிபலிக்கக்கூடியதாக தீர்வு யோசனைகள் வரவேண்டும். அப்போது தான் தீர்வுக்கான சூழ்நிலையை உருவாக்க முடியும்.

திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் தீர்வு யோசனை ஒன்றை முன்வைத்தால்தான் அது தொடர்பாக விடுதலைப்புலிகளுடனும் பேச்சை ஆரம்பிக்க முடியும்.

புலிகளுடன் ஆரம்பிக்கும் எந்தப் பேச்சுக்களிலும் ஆரம்பமாக அந்த யோசனைகள் அமையலாம்.

### புலிகளுக்கு முக்கிய பங்கு வேண்டும்

கேள்வி:- விடுதலைப்புலிகளுடன் இடம்பெறும் பேச்சுக்கள் வெற்றிபெறும் எனக் கருதுகிறீர்களா?

பதில்:- புலிகளைத் தவிர்த்து எவருடன் பேசியும் பயன் கிடைக்கப்போவதில்லை. அரசியல் இராணுவ சமநிலையில் — இந்தப் பிரச்சினையின் பங்காளராக — உள்ள விடுதலைப் புலிகளை வெளியே விட்டுப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. புலிகள் இன்றி இடம்பெறும் எந்தப் பேச்சினாலும் பலன் ஏதும் கிடைக்கப்போவதில்லை.

### பல விடயங்களில் இணக்கம் இல்லை

கேள்வி: பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக் கூட்டுக் குழுவுக்கும் தமிழ் அரசியற் கட்சிகளுக்கும் இடையில் ஏற்பட்ட கலந்துரையாடலில் இணக்கம் ஏற்பட்ட விடயங்கள் பற்றிக் கூற முடியுமா?

பதில்: இதுவரை நடந்த பேச்சுக்களில் இணக்கம் ஏற்பட்ட விடயங்களை விட இணக்கம் காணப்படாத விடயங்களே அதிகமாகும்.

பிராந்தியசபை, காணி, உள்ளூராட்சி ஆகிய மூன்று விடயங்களில் மட்டுமே முழுமையான இணக்கம் ஏற்பட்டுள்ளது.

ஆளுநர் நியமனம், கல்வி, நிதி, நீதித்துறை, தேர்தல் ஆகிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டபோதும் அவற்றில் இணக்கம் ஏற்படவில்லை.

ஆளுநர் நியமனத்தில் பிராந்திய சபையின் முதலமைச்சர் சிபார்சு பெறப்பட வேண்டும் என்று நாம் முன்வைத்த யோசனைக்கு இணக்கம் காணப்படவில்லை.

கல்வி விடயத்தில் தேசிய பாடசாலைகள், தேசிய கல்விக் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றை பிராந்திய சபையிடம் ஒப்படைக்கவேண்டும்என்று சமர்ப்பித்த யோசனையும் இன்னமும் ஏற்கப்படவில்லை.

வெளிநாடுகளில் இருந்து பிராந்திய சபைகளுக்கு நிதி கிடைப்பதைக் கட்டுப்படுத்தும் வகையில் உள்ள யோசனையை நீக்க வேண்டும் என்று விடுத்த கோரிக்கையும் ஏற்கப்படவில்லை.

நீதித்துறை மீளாய்வு யோசனையில், இயற்றப்படும் ஒரு சட்டம் தொடர்பாகப் பாதிக்கப்பட்டவர்கள் ஒருவாரத்தில் வழக்குத்தாக்கல் செய்ய வேண்டும் என்ற யோசனையை இருவருடங்களாக நீடிக்க வேண்டும் என்று கோரியுள்ளோம். அந்த விடயத்திலும் இணக்கநிலை ஏற்படவில்லை.

தேர்தல் தொடர்பாக புதிய யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. 50 சத வீதம் தொகுதி ரீதியாகவும், 50 சத வீதம் விகிதாசாரப்படியும் நடத்துவது என்று அந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக இன்னமும் ஆராயப்படவில்லை.

★

# அடிக்கடி பெய்யும் மழையினால் நெற்செய்கை அறுவடை பாதிப்பு

அரியாலை, பெப். 29

தற்போது பெய்து வரும் மழையினால் பெரும்போக நெற்செய்கை அறுவடை பாதிக்கப்பட்டிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வலிகாமம் மற்றும் தென்மராட்சிப் பிரதேசங்களில் பெரும்போகநெற்செய்கையை மேற்கொண்டவர்களில் பலர் நெல்லை அறுவடை செய்ய முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

அதே சமயம் வலிகாமம் தென்மேற்குப் பகுதியில் நேற்றுப்பெய்த மழையினால் அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்கதிர்கள் நீரில் மூழ்கி உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

சில விவசாயிகள் அறுவடை செய்து நிலத்தில் காயவிட்டிருந்தனர். இந்த நிலையில் திடீர் மழையினால் நெற்கதிர்கள் சேதம் அடைந்துள்ளன.

அறுவடைக் காலங்களில் மழைபெய்வது இதுவே முதல் தடவை என விவசாய வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இதேவேளை விவசாயிகளுக்கு ஏற்பட்ட அழிவு குறித்து நவாலி விவசாயிகள் சம்மேளனம் பெரும்பாக உத்தியோகத்தருக்கு அறிவித்துள்ளது.

வயல்களில் நெல்லைச் சூடு வைத்த சிலர் அங்கே வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் உழவு இயந்திரம் மூலம் சூடடிக்க முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-185-17)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

கடந்த ஆண்டு வலி. தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் 5ஆயிரத்து600 நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

இந்தவருடம் கட்டாக்காலியாகத் திரியும் நாய்களை நஞ்சூட்டி அழிக்கும் முறைக்குப் பதிலாக பழைய முறைப்படி வண்டில்கள் மூலம் நாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் மேற்கொண்டுள்ளார்.

கட்டாக்காலி நாய்களைப் பிடிப்பதற்கு பிரதேச சபையினால் விரைவில் இருவர் பயிற்றுவிக்கப்படவுள்ளனர்.

(இ-185)

## நெல் கொள்வனவு

தென்மராட்சி, பெப். 29

தென்மராட்சி பிரதேசத்தில் நெல் அறுவடை நடைபெற்று வருவதால் நெற்செய்கையாளரிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்ய கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்வந்துள்ளது.

ஒரு மூடை நெல் ஆயிரத்து 100 ரூபா தொடக்கம் ஆயிரத்து 200 ரூபா வரை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-117)

# நெடுந்தீவு பிரதேச சபையில் ஆளணிப் பற்றாக்குறை

நெடுந்தீவு, பெப். 29

நெடுந்தீவு பிரதேச சபையில் நிலவி வரும் ஆளணிப் பற்றாக்குறை குறித்து நெடுந்தீவுக்கு வருகை தந்த யாழ்ப்பாணம் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். கிருஷ்ணசாமியுடன் பிரதேச சபைத் தலைவர் ஏ. டபிள். யூ. அரியநாயகம் கலந்துரையாடினார்.

வீதித் தொழிலாளர்கள் இன்மையால் துப்புரவுப் பணிகள் இடம்பெற முடியாதுள்ளதெனவும் குடி தண்ணீர் விநியோகச் சேவைக்கும் போதிய அளவு ஊழியர்கள் இல்லை எனவும் அவரிடம் தெரிவிக்கப்பட்டது.

சோலைவரிகள் மற்றும் ஏனைய வரிகள் அறவிடப்படாமையினால் சபைக்கு வருமானம் மிகவும் குறைவாகவே உள்ளதெனவும் அவருக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் இந்த விடயங்கள் குறித்து முடிவுகள் எதுவும் செய்யப்படவில்லை. (இ-111)

## கணனிப் பயிற்சி

வலி. தென்மேற்கு, பெப். 29

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்களுக்கு கணனிப்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கை வடக்கு — கிழக்கு மாகாண முகாமைகள் அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ-185)

## தொழில் முயற்சி பயிற்சிப் பட்டறை

வலி. வடக்கு. பெப். 29

யாழ். ஆற்றல் மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் படித்த இளைஞர், யுவதிகளுக்கு சிறு தொழில் முயற்சி சம்பந்தமான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடத்தப்படவுள்ளன.

இப்பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்வதற்கு தகைமையுடைய — ஜி.சீ.ஈ. (உயர்தரம்) சித்தியடைந்த — இளைஞர், யுவதிகளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு பத்துப்பேர் என்ற அடிப்படையில் தெரிவுசெய்து அனுப்பும்படி பிரதேச செயலாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

(உ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய அறிவித்தல்

திருநெல்வேலி ஞானக் குழந்தை இல்லத்தில் கல்வி கற்கும் பாலர்களின் பெற்றோர்களுக்கு!

எமது கழகத்தின் மாதாந்த கொடுப்பனவான 75/- ரூபா தவிர வேறு எவ்வித நன்கொடையும் கொடுக்கத் தேவையில்லை என இத்தால் அறியத் தருகின்றோம்.

நன்றி.
நிர்வாகம்,

**பாலர் கல்விக் கழகம்,**
**49 / 5, யாழ். வீதி, யாழ்ப்பாணம்.**

(74046)

## 31 ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 06 — 04 — 1906



மறைவு: 30 — 01 — 2000

### அமரர் வல்லி செல்லர்


பாசமிகு தந்தையாய்
பாரினிலே எமை வளர்த்துப்
பல சிறப்பும் பெற்று நாம் வாழ
பார்த்திருந்து களித்தீரையா!
விதியதனை விலக்கலாமோ
விண்ணடைந்தீர் தவிக்கின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

தேன்குடியிருப்பு,
காரைக்கால்,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(74029)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் செல்லப்பா கந்தையா
(சாமி அப்பா)

அன்னை மடியில்; 1911 — 02 — 11
ஆண்டவன் அடியில்; 1999 — 03 — 07

**திதி: 29—02—2000**

ஒவ்வொரு நிமிடமும் மறக்கவே முடியாத உன்
ஞாபகங்கள் உன்னையே நினைவூட்டுகின்றன!
ஓடிவந்து எங்களுடன் உற்ற கதை சொன்ன
உற்றமொழி ஓராண்டு காலம் சென்றாலும்
மறக்க மாட்டோம்; மறக்கவும் முடியாதப்பா!
வாடாத மலராய் வற்றாத நீராய்
அன்பு ஊற்றாய் நீர் இருக்க
ஆண்டவனை நினைந்துருகிக் கேட்கின்றோம்!

இன்று (29-02-2000) செவ்வாய்க்கிழமை நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மு. இராசேந்திரம்** (சகோதரர்)
**இ. மகேஸ்வரி** (மைத்துனர்)
**செ. குலசேகரம், ந. துரையம்மா**
(பெறாமக்கள்)
**மற்றும் குடும்பத்தினர்.**

அனு இல்லம்,
பட்டினசபை வீதி,
மானிப்பாய்.

(74017)

## வடமராட்சியில் இயங்கிய திருடர் கோஷ்டி சிக்கியது

நெல்லியடி, பெப். 29

வடமராட்சிப் பகுதியில் அண்மைக் காலமாக, திருட்டுக்களில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படும்— ஐவர் அடங்கிய—திருட்டுக் கோஷ்டியினர் பருத்தித்துறை பொலீஸாரின் வலையில் சிக்கினர். இவர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள் உட்பட சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான திருட்டுப் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை பொலீஸ் நிலைய தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் ஆர். எம். ஜே. ஹமிலஸ், குற்றத் தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர்களான எல். கமஹே, எம். காமினி மற்றும் பொலீஸ் கான்ஸ்டபிள்களான ஆர். விஜயரட்ண, கே. வாத்தேவ, எஸ். ஏக்கநாயக்கா. பி அனில், டபிள்யூ ஹமல், டபிள்யூ. கருணரட்ண, ஆர். ஜெயராஜ் ஆகியோர்களைக் கொண்ட பொலீஸ் கோஷ்டியே இம்மாதம் 15 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதிவரையான காலப்பகுதியில், அல்வாய் முத்துமாரி அம்பாள் ஆலய பகுதியைச் சேர்ந்தவர்களான ஐந்து சந்தேக நபர்களைக் கைது செய்தது.

பொலீஸாரின் விசாரணையின்போது இவர்கள் கொடுத்த தகவல்களையடுத்து உறவினர், நண்பர்கள் வீடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெறுமதிமிக்க திருட்டுப் பொருள்களையும் பொலீஸார் மீட்டுள்ளனர்.

பொலீஸ் கோஷ்டியினால் மீட்கப்பட்ட பொருள்களில், எம்.டீ. 90 இன மோட்டார் சைக்கிள் ஒன்று லேடீஸ் சையிக்கிள்கள்—2, ஆண்களுக்கான சையிக்கிள்கள்—4 நஷனல், பன்ஷோனிக் இன ரேப் றெக்கோடர்கள்—7, கைக்கடிகாரங்கள்—10, சுவர் மணிக்கூடு. 1 மற்றும் கடைகளில் திருடப்பட்ட சவர்க்கார வகைகள், சம்போ தீப்பெட்டிகள், சலவைப் பவுடர்கள் உட்பட பல பொருள்கள் அடங்குகின்றன.

வடமராட்சிப் பகுதியில் ஏற்கனவே இடம்பெற்று வந்த பல திருட்டுக் குற்றங்களுக்காக, இவர்கள் பல தடவைகள் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலிலும் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் ஐவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட பருத்தித்துறை மாவட்ட நீதிவான், இவர்களை மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு பருத்தித்துறை பொலீஸாரைப் பணித்தார்.

இதேவேளை திருடர்களிடம் தமது உடைமைகளைப் பறிகொடுத்த மக்களை உடனடியாகப் பருத்தித்துறை பொலீஸ் நிலையத்திற்கு சமுகமளித்துஅயற்றை அடையாளம் காட்டுமாறு, பருத்தித்துறை பொலீஸ் நிலைய தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் ஆர். எம். ஜே. ஹமிலஸ் கோரியுள்ளார்.

(உ-109)

## சிறுவர் பூங்கா அமைப்பு

சண்டிலிப்பாய், பெப். 29

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் நவீன வசதிகளுடன் கூடிய சிறுவர் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் உதவியுடன் சுமார் ஓர் இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் இந்தச் சிறுவர் பூங்கா விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாகக் கல்லூரி அதிபர் கி- மகேந்திரராசா தெரிவித்தார்.

(உ-135)

## ஓயில் விலை அதிகரிப்பு

சுன்னாகம், பெப்.29

கியர் ஓயில் உட்பட சகல வகையான என்ஜின் ஓயில் வகைகளுக்கும் 10 ரூபா விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இங்கு கடந்த சனிக்கிழமை முதல் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இந்த விலை அதிகரிப்பு நடைமுறைக்கு வந்துள்ளது.

இதற்கான பணிப்புரை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விடுக்கப்பட்டதாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தெரிவிக்கப்பட்டது.

(உ-27)

## வலுவூட்டல் பயிற்சி நெறி

வலி வடக்கு பெப். 29

வடக்கு—கிழக்குமாகாணங்களைச் சேர்ந்த விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான வலுவூட்டல் பயிற்சி நெறி இவ்வாரம் திருமலையில் நடைபெறுகின்றது.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்வதற்கு யாழ். மாவட்டத்தில் இருந்து கரவெட்டி, தெல்லிப்பழை பிரதேச செயலகங்களைச் சேர்ந்த விளையாட்டு உத்தியோகத்தர்கள் அங்கு செல்கின்றனர்.

(உ-86)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 03 — 06 — 1924



மறைவு: 30 — 01 — 2000

### திருமதி மகேஸ்வரி பஞ்சலிங்கம்

30-01-2000 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் மகேஸ்வரி பஞ்சலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (29-02-2000) செவ்வாய்க்கிழமை நடைபெறும். அதனைத் தொடர்ந்து நண்பகல் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு சகல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சி, பஞ்சலிங்கம்** (Advacate)
[கணவர்]

**நகுலாம்பிகை அம்பிகைபாகன்**
[சகோதரி]

''மணிமனை''
மல்லாகம்.

(74039)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருவேலன் மினாசி

மலர்வு 10-08-1927
உதிர்வு 30-01-2000

தந்தையே! எம்மை இந்த
அவனியில் சிறக்க வைத்தாய்!
எம் அனைவரின் உயிர் நிலைக்கும் மட்டும்
மறப்போமா உம் நினைவை
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

(74010)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேட்டோ-யூகோஸ்லாவிய படையினரிடையே முறுகல்

பெல்கிரேட், பெப். 29

கொசோவோவில் நிலை கொண்டுள்ள நேட்டோ சமாதானப் படையினருக்கும் யுகோஸ்லாவியப் படையினருக்கும் இடையில் முறுகல் நிலை அதிகரித்து வருவதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

கொசோவோவின் எல்லையில் அமைந்துள்ள முஜோனா நகரில் நிலை கொண்டுள்ள யுகோஸ்லாவியப் படையினர் மீது அல்பேனிய கெரில்லாக்கள் நடத்திய தாக்குதலில் ஒரு சேர்பிய சிப்பாய் பலியானதை அடுத்து அங்கு இந்த முறுகல்நிலை தோன்றி உள்ளது.

முறுகல்நிலை அதிகரித்து வருவதை அடுத்து அப்பகுதியில் நிலைகொண்டுள்ள நேட்டோ சமாதானப் படையினரின் அமெரிக்க அணியினர் கனரக வாகனங்கள் மற்றும் ஆயுதங்களைக் குவித்து வருவதாகக் கூறப்படுகிறது. மறு புறத்தில் யுகோஸ்லாவியா அங்கு தனது படைகளைக் குவித்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எந்த ஒரு நிலைமையையும் எதிர்கொள்ளும் தயார் நிலையில் இருக்குமாறு யுகோஸ்லாவிய அதிபர் சொலோபடோன் மிலோசவிக் தனது படையினருக்கு உத்தரவிட்டுள்ளார். (இ—6)

# ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணை: தாய்வான்தயாரித்துள்ளது!

தாய்பேய், பெப். 29

சீனாவிடம் உள்ள நவீன ஏவுகணைகளை எதிர்த்துத் தாக்கி அழிக்கக்கூடிய அதி நவீன ஏவுகணைகளை தான் வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளதாக தாய்வான் அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் 'குரூஸ்' ரக ஏவுகணைக்கு நிகரானதாக இது தயாரிக்கப்பட்டுள்ளது. சூ—ஷங்—பெங்—3 என்று அதற்குப் பெயரிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

யுத்தக் கப்பல்களில் வைத்து இயக்கக் கூடிய இந்த ஏவுகணைப் பரிசோதனை வெற்றிகரமாக அமைந்ததாக தாய்வானின் மத்திய செய்தி ஏஜென்சி கூறியது. எனினும் ஏவுகணை சென்று தாக்கக்கூடிய இலக்கின் தூரம் மற்றும் பரிசோதனை நடத்தப்பட்ட இடம் என்பன குறித்த தகவல்கள் எவையும் வெளியிடப்படவில்லை.

தாய்வான் மீண்டும் சீனாவுடன் இணைவதற்கான பேச்சுக்களை உடன் ஆரம்பிக்காவிட்டால் அதன் மீது பலப்பிரயோகம் செய்ய நேரிடும் என்று சீனா தெரிவித்த இரு வார கால இடைவெளிக்குள் தாய்வானின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது, (இ-6)

## செச்சினியாவில் நிகழ்ந்த

# ரஷ்யப் படையினரின் குற்றங்களை விசாரிக்க ஐரோப்பிய அதிகாரி!

மொஸ்கோ, பெப் 29

செச்சினியாவில் ரஷ்யப் படையினர் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்துவதற்காக ஐக்கிய ஐரோப்பிய மனித உரிமைகள் ஆணைக் குழுத் தலைவர் மொஸ்கோ சென்றுள்ளார்.

அவர் தனது விசாரணைகளை எவ்வித இடையூறுமின்றி நடத்துவதற்கு அனுமதிக்கப் போவதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

அதேசமயம்—

செச்சினியாவில் ரஷ்யப் படையினர் மேற்கொண்ட கொடூரமான மனித உரிமை மீறல்கள் குறித்து மேற்கு நாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று வெளியிட்ட வீடியோ படக்காட்சி பொய்யானது என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

ஜேர்மன் எம் - 24 என்ற தொலைக் காட்சி நிறுவனம் செச்சினியாவில் ரஷ்யப் படையினர் செச்சின் தீவிரவாதிகளைச்சித்திரவதை செய்யும் காட்சி என்று தெரிவித்து சில நிமிடக் காட்சி ஒன்றை ஒளிபரப்பியது. அந்தக் காட்சி நிறுவனம் கூறியது போன்று ரஷ்யப் படையினர் சித்திரவதை செய்யும் காட்சி இல்லை என்று ரஷ்யா கூறியது.

முன்னேறிச் செல்லும் ரஷ்யப் படையினரை வழி மறித்துப் பொதுமக்கள் வீதியில் படுத்திருக்கும் காட்சியே திரிபுபடுத்தப்பட்டு ஒளிபரப்பப்பட்டுள்ளதாக ரஷ்யா மேலும் கூறியுள்ளது.

ஆனால் ரஷ்யாவால் பிடிக்கப்பட்ட செச்சினிய தீவிர

உலக அரங்கில்

வாதிகளை ரஷ்யப் படையினர் சித்திரவதை செய்து கொல்லும் காட்சியே ஒளிபரப்பப்பட்டதாக எம்-24 தொலைக் காட்சி நிறுவனம் தெரிவித்தது. (இ—6)

## பீஹாரில்

# எந்தக் கட்சிக்கு ஆதரவுஎன்பதில் மாநில காங்கிரஸில் முரண்பாடு

புதுடில்லி, பெப். 29

பீஹாரில் புதிய அரசாங்கத்தை அமைப்பதில் உள்ள இழுபறிநிலை தொடர்ந்து நீடித்து வருகின்றது. ராஷ்டிரிய ஜனதா தள் கட்சிக்கு ஆதரவளிப்பது குறித்து காங்கிரஸ் கட்சிக்குள் கருத்து முரண்பாடுகள் தோன்றி உள்ளன.

ராஷ்டிரிய ஜனதாதளத்துடன் கூட்டணி வைத்துக் கொள்ளும் எந்த ஒரு யோசனைக்கும் காங்கிரஸ் ஆதரவு தெரிவிக்காது என்று மாநில காங்கிரஸ் கட்சிப் பொதுச் செயலர் அனில் குமார்சர்மா கூறி உள்ளார்.

ஆனால் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர்களில் ஒருவரான ஷக்கில்ஷத் ஷமான் தலைமையிலான பிரிவு சமய சார்பற்ற அரசு ஒன்று அமைவதற்கு காங்கிரஸ் ஆதரவளிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

அதேசமயம்— ஆட்சி அமைக்க தம்மை அழைக்குமாறு தேசிய ஜனநாயகக்கூட்டணி ஆளுநரிடம் கோர உள்ளதாக பிரதமர் வாஜ்பாய் கூறினார். (இ-6)

## கணனி இணைப்புகளை தகர்க்கத்திட்டம்

வாஷிங்ரன், பெப். 29

அமெரிக்க வர்த்தக கணனி இணைப்புகளை தகர்க்கக் கூடிய தொழில் நுட்பங்களை ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் அபிவிருத்தி செய்து வருவதாக அமெரிக்க உளவு அமைப்பான சி. ஐ. ஏ தெரிவித்துள்ளது. (இ-6)

# தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு ஜெயலலிதா எதிரானவரல்லர்

## அ. தி. மு.க துணைச் செயலர் கூறுகிறார்

சென்னை, பெப். 29

தமிழகத்தில் தமிழ்க் கல்வியின் வளர்ச்சிக்கு அ.தி.மு.கவினரோ கட்சியின் பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதாவோ எதிரானவர்கள் அல்லர் என்று அ. தி. மு. கவின் துணைப் பொதுச் செயலர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

மாநிலத்தில் உள்ள முன் பள்ளிகள் மற்றும் ஆரம்பப் பாடசாலைகளில் போதனைகள் அனைத்தும் கட்டாயம் தமிழிலேயே நடத்தப்பட வேண்டும் என தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்கு ஜெயலலிதா கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

இதனை அடுத்து ஜெயலலிதாவும் அ.தி.மு.கவும் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு எதிரானவர்கள் என்று தி.மு.க கடும் பிரசாரம் மேற் கொண்டு வருகின்றது. இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே செங்கோட்டையன் மேற் கண்டவாறு— கூறி உள்ளார்.

ஜெயலலிதா தமிழ்மொழிக் கல்விக்கு எதிரானவர் என்ற கருத்தை மக்களிடம் திணிக்க தி.மு.கவும் அதன் கூட்டணிக் கட்சிகளும் முயன்று வருகின்றன என்றும் அவர் குற்றம் சாட்டினார். (இ- 6)

# அமெரிக்காவுக்கான கியூபாத் தூதர் கனடாவுக்கு நாடு கடத்தப்பட்டார்!

நியூயோர்க், பெப். 29

அமெரிக்காவுக்கான கியூப நாட்டுத் தூதர் ஜெசி எமிரட்டோரி அமெரிக்காவில் இருந்து கனடாவுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

உளவுப்பணிகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டி அவரை உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறுமாறு அமெரிக்கா கோரி இருந்தது. அவர் வெளியேறுவதற்கான காலக்கெடுவையும் அது விதித்திருந்தது.

ஆனால் தன்மீதான குற்றச் சாட்டுக்களை மறுத்த கியூபத்தூதர் நாட்டை விட்டு வெளியேற மறுத்து விட்டதுடன் அமெரிக்க அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் அறிவித்தார்.

எனினும் அவர் வெளியேறுவதற்கு விதிக்கப்பட்ட காலக்கெடு முடிவடைந்து விட்டதனால் அவரை அமெரிக்க அரசு கனடாவுக்கு நாடு கடத்தி உள்ளது. கியூபத் தூதரின் வீட்டுக்குச் சென்ற அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வுத்துறை (எவ். பி. ஐ) அவரைக் கைது செய்து கனடாவுக்கு செல்லும் விமானம் ஒன்றில் ஏற்றி அனுப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-6)

# அஸாமில் கண்ணிவெடித் தாக்குதல் அமைச்சர் உட்பட ஐவர் பலியாகினர்!

புதுடில்லி, பெப். 29

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் தீவிரவாதிகள் நடத்திய கண்ணி வெடித் தாக்குதலில் மாநில அமைச்சர் ஒருவரும் மேலும் நான்கு பேரும் கொல்லப்பட்டனர்.

நல்வாரி மாவட்டத்தில் அமைச்சர் சென்று கொண்டிருந்த வாகனம் கண்ணிவெடியில் சிக்கியது. இதில் மாநில வனத்துறை மற்றும் பொதுத்துறை அமைச்சர் நகேன் சர்மா அந்த இடத்திலேயே உயிரிழந்தார். அவருடன் வாகனத்தில் சென்ற மேலும் 4 பேரும் உயிரிழந்தனர்.

அஸாமில் பிரிவினைகோரிப் போரிட்டு வரும் அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணி என்ற தீவிரவாத அமைப்பே இந்தத் தாக்குதலை நடத்தி இருக்கலாம் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

அமைச்சரின் மறைவுக்கு அஞ்சலி தெரிவித்து மாநிலத்தில் நீதிமன்றங்கள், பாடசாலைகள் அரச பொது நிறுவனங்கள் என்பன ஒரு நாள் மூடப்பட்டிருந்தன. (இ-6)

# மொஸாம்பிக்கை மீண்டும் ஒரு சூறாவளி தாக்கலாம்

பெப். 29

கடும் வெள்ளத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள மொஸாம்பிக்கை மீண்டும் ஒரு கடும் புயல் தாக்கக் கூடும் என்று வானிலையாளர்கள் எச்சரித்துள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள கடும் வெள்ளத்தால் லட்சக் கணக்கான மக்கள் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். வீடுகளை விட்டு வெளியேறி பொது இடங்களிலும் முகாம்களிலும் தங்கி உள்ள மக்களிடையே மலேரியா மற்றும் வாந்திபேதி நோய்கள் வேகமாகப் பரவி வருவதாக உதவிப் பணியாளர்கள் அறிவித்துள்ளனர்.

பல லட்சம் மக்கள் உணவு, உறைவிடம், மருந்து வசதிகள் ஏதுமற்ற நிலையில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி உள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஹெலிகள் மூலம் உணவு போடும் பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. அந்த ஹெலிகள் அவசர உதவி தேவைப்படும் மக்களை மீட்கும் பணிக்கு பயன் படுத்தப்பட்டு வருகின்றன.

# ஷெரிப்பின் வழக்கறிஞர்கள் இருவர் விலகுவதாக அறிவிப்பு

இஸ்லாமாபாத் பெப். 29

பாகிஸ்தானில் பதவி கவிழ்க்கப்பபட்ட பிரதமர் நவாஸ் ஷெரிப் சார்பாக நீதிமன்றில் ஆஜராகும் இரு பிரபல வழக்கறிஞர்கள் தாம் ஷெரிப்புடன் தொடர்புடைய வழக்குகளில் இருந்து வாபஸ் பெறுவதாக அறிவித்துள்ளனர்.

வழக்குத் தொடர்பான ஷெரிப்பின் அறிக்கை தனியாகவே பதிவு செய்யப்பட வேண்டும். அவை வெளிவிடப்படக் கூடாது என்று கடந்தவாரம் கராச்சி பயங்கரவாத ஒழிப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனை அடுத்தே தாம் வழக்கு விசாரணைகளில் இருந்து வாபஸ் பெறுவதாக வழக்கறிஞர்கள் கூறி உள்ளனர்.

விமானக் கடத்தல், தேசத் துரோகம், கொலை முயற்சி ஆகிய குற்றச் சாட்டுக்களுக்காக நவாஸ் ஷெரிப் பயங்கரவாத ஒழிப்பு நீதிமன்றில் விசாரணைகளை எதிர்நோக்கி வருகிறார். அவருடன் மேலும் 6 பேரும் இதே குற்றச்சாட்டுக்களைஎதிர்நோக்கி உள்ளனர்.

இவர்கள் மீதான குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் மரணதண்டனை விதிக்கப்படலாம். இத்தகைய நிலையில் வழக்கறிஞர்கள் இருவரும் வழக்குகளில் இருந்து பின்வாங்கி இருப்பது ஷெரிப்புக்கு ஏற்பட்டுள்ள பலத்த பின்னடைவு என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-6)

## சீனா குற்றச்சாட்டு

பெய்ஜிங், பெப். 29

தாய்வான் நீரிணைப் பகுதியில் அமெரிக்கா பதற்றத்தை உண்டாக்கி வருவதாக சீனா குற்றம்சாட்டியுள்ளது.

சீன — அமெரிக்க கூட்டுப் பிரகடனத்தில் குறிப்பிட்ட மூன்று விடயங்களை அமெரிக்கா மீறியுள்ளதாகவும் சீன வெளிநாட்டமைச்சு அறிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்தத்தை மீறியதன் மூலமும் தாய்வானுக்கு ஆயுதங்களை விற்பனைசெய்வதன் மூலமும் அமெரிக்கா அங்கு பதற்றத்தை உருவாக்கி வருவதாகச் சீனா தெரிவித்துள்ளது. (இ—10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்திலும்

## சிவராத்திரி தினத்தில் தீர்த்தமாட

# பக்தரை அனுமதிக்குமாறு கோரிக்கை

காரைநகர், பெப். 29

மகாசிவராத்திரி அமாவாசைத் தினத்தில் காரைநகர் ஈழத்துச்சிதம்பர புனித தீர்த்தக்கரையில் தீர்த்தமாட பக்தர்களை அனுமதிக்குமாறு கோரிக்காரைநகர் கடற்படை பொதுசனத் தொடர்பு அதிகாரிக்கு மகஜர் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

காரைநகர் சிவன்கோயில் ஆதீனகர்த்தாக்களே மேற்படி மகஜரை அனுப்பி வைத்துள்ளனர்.

'கசூரினா பீச்' என்று உல்லாசப் பயணிகளைக் கவரும் இத்தீர்த்தக்கரைக்கு சாதாரண நாள்களில் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை.

ஈழத்துச் சிதம்பரத்தில் சிவராத்திரி தினமான எதிர்வரும் சனிக்கிழமை நான்கு சாமங்களும் விசேட அபிஷேகம், பூசை என்பன நடைபெறும். மறுநாள் காலை பக்தர்கள் ஆலயத்திலிருந்து புனித தீர்த்தக்கரைக்குத் தீர்த்த மாடச் செல்வர். (இ-73)

## அஞ்சலி

### செல்வன் திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் அகாலமரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம்.

அன்னாரின் அன்புத்தந்தையார் திருநாவுக்கரசு, அன்புத் தாயார் திருமதி கோமளா திருநாவுக்கரசு (கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் — எண்பார்வை) ஆகியோரது குடும்பத் துயரத்தில் நாம் பங்குபற்றி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நல்லூர்க் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளர்கள், பணியாளர்கள்,**
**யாழ். மாவட்ட**
**அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.**
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

(சி/11227)

## கண்ணீர் அஞ்சலி

திருமதி கோமளா திருநாவுக்கரசு
யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி
ஆணையாளர் ( கணக்காய்வு )

அவர்களின் அன்பு மகன்

### திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் அகால மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். இவரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**தலைவர், பணிப்பாளர்கள்,**
**பணியாளர்கள்.**

**ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்.**
**ஊர்காவற்றுறை.**

(சி/11233)

## நீங்கா நினைவில்
## மூன்றாம் ஆண்டு

அன்னை மடியில்: 13 — 04 — 1939



மண்ணின் மடியில்: 04 — 03 — 1997

### அமரர் சுப்பையா இராசரத்தினம்

(இ. போ. ச. நடத்துநர் — காரைநகர் சாலை)

திதி 29-02-2000

ஒளிதந்து வழிகாட்டி வாழவைத்த அப்பாவே...
அழியாத அந்நினைவு விழிநீராய் வடிகிறது!
மீண்டும் உங்கள் வரவுக்கு ஏங்கும்!

**அன்பு மனைவி,**
**பிள்ளைகள், மருமகன்.**

29/5, புகையிரத நிலைய வீதி,
புங்கன்குளம்,
அரியாலை.

(சி/1123[illegible])

## முதன்மை ஆசிரியர் நியமனம்

வலிகாமம் தெற்கு, பெப். 29

ஆரம்பக்கல்வி, கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், சமூகக்கல்வி, நடனம், முறைசாராக்கல்வி ஆகிய பாடங்களுக்கு வலிகாமம் கல்விவலயத்தில் முதன்மை ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர்.

முதன்மை ஆசிரியர் பதவிக்கு பொருத்தமான ஆசிரியர்கள் இதற்கு உரிய விண்ணப்பப்படிவத்தினை நிரப்பி மார்ச் 3 ஆம் திகதிக்கு முன்பாக வலயக்கல்வி அலுவலகத்தில் சேர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியசேவையில் சிரேஷ்டதரங்களில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமெனவும் தெரியவருகின்றது. (இ-152)

## நாடகப் போட்டி

'யுனெஸ்கோ' அனுசரணையுடன் யாழ். பல்கலைக் கழகத்தின் ஐந்து பீடங்களுக்கு இடையேயான நாடகப் போட்டி மார்ச் 5 ஆம் திகதி பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலை அரங்கில் நடைபெறும்.

சாந்தி, சமாதானம், சகிப்புத்தன்மை ஆகியவற்றை வலியுறுத்தும் வகையிலான இந்த நாடகப்போட்டியின் இறுதியில் பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (இ-10)

## கட்டடத் திறப்புவிழா

கரணவாய் கிழக்கு வேதாரணியேஸ்வரா சனசமூக நிலையவேதாரணியேஸ்வரா பாலர் பாடசாலைக் கட்டடத் திறப்புவிழா அண்மையில் இடம்பெற்றது.

நிலையத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ ச. சட்டநாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார். (இ-103)

## உணவு முத்திரைக்கு நிவாரணம்

அரியாலை, பெப். 29

யாழ். பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்தோருக்கான 84 ஆவது ஏ. பி. நிவாரண உணவு முத்திரைப்புள்ளிகளுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகள் ஊடாக நிவாரணப் பொருள்களை விநியோகிப்பதற்கும் கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அரிசி, சீனி, பருப்பு, [illegible] (இ-17)

## முதலாம் ஆண்டின்
## நீங்காத நினைவு



### அமரர் தம்பிப்பிள்ளை கணேசராசா

(C. T. B. காப்பாளர்)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 1942—01—08 | 1999—03—12 |

அப்பாவின் நிழலை எப்போதும் நினைத்திருந்தோம்
தப்பாகிப்போனதே நினைவு கனவாகிப் போனதே
வருடப்பிறப்புகளால் விழிநீர்தான் வற்றினாலும்
காத்திருப்போம் காலனிடம் வந்து நாமுங்களைக்காண.

— குடும்பத்தினர்

பாடசாலை வீதி,
நாவற்குழி.

(74069)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்
## நன்றி நவிலலும்



### அமரர் ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை

(ஓய்வுபெற்ற மதுவரி அலுவலர்)

| அன்னை மடியில்: | மண்ணின் மடியில்: |
|---|---|
| 26 10—1926 | 30—01—2000 |

காலமே அவரைக் காற்றோடு கலந்திட்டாயா?
காற்றே! எம் கதை அவருக்கு கூறாயோ!

அன்னாரின் இறுதி அஞ்சலியில் கலந்து எமக்கு பல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரது இல்லத்தில் இன்று (29-02-2000) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அந்திசாஸ்திரக் கருமகாரியங்களிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

அவர் பிரிவால் துயருறும்
**- குடும்பத்தினர்**

29/5, புகையிரதநிலையவீதி,
புங்கன்குளம்
அரியாலை.

(சி/11237)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பேச்சுக்கு உகந்த நிலை அவசியம்

இம்மாத மத்தியில், இரண்டு வாரங்களுக்கு முன்னர், கொழும்பு வந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் விரிவான பேச்சுக்களை நடத்தினார், நோர்வே வெளிவிவகார அமைச்சர் நட் வொலேபெக். கொழும்பில் பேசிய விவரங்களுடன் அவர் லண்டன் சென்று, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் கலந்தாலோசனை செய்திருக்கிறார்.

அப்போது —

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் உகந்த சூழ்நிலையை உருவாக்குவதன் அவசியத்தை அன்ரன் பாலசிங்கம் எடுத்துரைத்திருக்கிறார். போர் உக்கிரத்தைத் தணித்து, நல்லெண்ணம் மற்றும் பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தும் சுமுக சூழ்நிலையை உருவாக்கவேண்டும். அதற்கான நடைமுறை ஒழுங்குகளைச் செய்வது சமாதானப் பேச்சுக்களுக்கு அவசரமானதும் அவசியமானதும் ஆகும் —என்று அவர் வலியுறுத்தி இருக்கிறார்,

விடுதலைப் புலிகள் தரப்பிலான இந்த நிலைப்பாட்டை எவரும் குறைகாண முடியாது. போரைத்தொடர்ந்து கொண்டு, சமாதானப் பேச்சை நடத்துவது என்பது அர்த்தமற்றது. இந்தக் கருத்தை ஏற்கனவே பல தடவைகள் இப்பத்தியில் எடுத்துரைத்துள்ளோம்.

இரண்டு நாடுகளின் (மக்கள் வாழாத) எல்லைப் பிரதேசங்களில் நடைபெறும் போர் வேறு. மக்கள் வாழ்விடங்களைப் போர்க் களமாக்கி அழிவுகளை உண்டாக்கும் போர் வேறு. இரண்டாவது வகையினால் மக்களின் வாழ்க்கை அழிந்து கொண்டிருக்கும்.

முதலாவது வகையான போரில், சமாதானம் காண்பதற்கான பேச்சுக்களை, வேண்டுமானால் போர் ஒரு புறம், பேச்சு இன்னொரு புறம் என்று வைத்துக்கொள்ளலாம். இரண்டாவது வகைக்கு அது பொருந்தவே பொருந்தாது. தமிழர்கள் மீதான அடக்குமுறை நடவடிக்கைகளைத் தொடர்ந்து கொண்டு, போரை நடத்திக்கொண்டு, பேச்சுவார்த்தை நடத்துவது என்பது அடர்ந்த கானகத்தில் காரிருளில் நின்று பாதை தேடுவது போலாகும்.

பேச்சுவார்த்தை, தீர்வு, சமாதானம் என்பன கடந்த பல வருடங்களாக ஆசைக்கு உச்சரிக்கப்படும் பதங்களாகவே இருந்து வருகின்றன. இத்தகைய பின்னணியில் சமாதானப் பேச்சு ஒன்று தொடங்கவிருப்பது எல்லோரது ஆதரவுக்கும் உரியது. அந்தப் பேச்சுக்கள் உகந்த சூழ்நிலையில் நடைபெற்றாலேயே வெற்றியை, சமாதானத்தை எதிர்பார்க்கலாம்.

போர் ஓய்ந்தால் மட்டுமே பேச்சுக்களில் மக்களுக்கு நம்பிக்கை உண்டாகும். அது மட்டுமன்றி, இரண்டு பிரதான தரப்புகளுக்கும் இடையில் நிலவும் பகைமை உணர்வு நீங்கி பரஸ்பர நம்பிக்கை பிறக்கவும் ஏதுவாகும்.

மூன்றாந் தரப்பு ஒன்று தொடர்பாளராக இருப்பதால் பேச்சுக்கள் இடையில் முறிந்து போகாதவாறு ஆரம்பம் செம்மையானதாக அமையப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

பேச்சுவார்த்தை நடத்துவதற்கான உகந்த சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்குப் போர் நிறுத்தம் அத்தியாவசியம். இதனை மனதார உணர்ந்து அரசு ஆக்கபூர்வமாகச் செயற்படுவது மிகவும் அவசியம்.

# பாண் விற்பனையில் சுகாதாரம்

# பேண வைத்திய அதிகாரி அறிவுறுத்து

நவாலி, பெப். 29

பாண் இன்று மக்களின் பிரதான உணவாக உள்ளது. எனவே பேக்கரியில் தயாரிக்கப்படும் பாண் சுகாதாரமான முறையில் மக்களைச் சென்றடைய வேண்டும்.

இவ்வாறு பேக்கரி உரிமையாளர்களுடனான கலந்துரையாடலில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி எஸ். இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

பாண் எடுத்துச் செல்லும் பெட்டி தினமும் சுத்திகரிக்கப்பட வேண்டும். சரியான முறையில் பேக்கரியின் பெயர் அதில் எழுதப்பட வேண்டும்.

வெளியில் பாண் தெரியாதவாறு பெட்டகம் நன்கு மூடப்பட வேண்டும். இவ்வாறு கொண்டு செல்லப்படாத பேக்கரி உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் சைக்கிளில் பாணைக் கொண்டு செல்பவர்கள் கடைகளில் விநியோகிக்கும் போது வந்த வேகத்தில் அவசரம், அவசரமாக கைகளில்பாணை எடுக்கி விநியோகம் செய்வதை நிறுத்த வேண்டும்.

கடை உரிமையாளரிடம் சுத்தமான பெட்டி ஒன்றைப் பெற்று அதில் வைத்தே பாண் வழங்கவேண்டும்.

கடை உரிமையாளர்கள் கண்ணாடிப் பெட்டியில் வைத்துப் பாணை விற்பனை செய்ய வேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-100)

## சுடலை வீதியைத் திருத்துமாறு கோரிக்கை

நெடுந்தீவு, பெப். 29

நெடுந்தீவு மேற்கு— பனங்காணி முனை ஆற்றங்கரை ஒடை, சுடலை வீதியைப் புனரமைக்குமாறு, இந்து இளைஞர் மன்றம் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மழை காலத்தில் அந்த வீதியால் போக்குவரத்துச் செய்ய முடியாதிருப்பதாகவும் பிரேதங்களை எடுத்துச் செல்வது கஷ்டமாக இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(இ-111)

## பாடசாலையை மீண்டும் இயங்க வைப்பதற்கு முயற்சி

வலிகாமம் தெற்கு, பெப். 29

தற்காலிகமாக மூடப்பட்டிருந்த வலிகாமம் வலய மாரீசன்கூடல், சுப்பிரமணியம் வித்தியாலயத்தை மீண்டும் திறந்து இயங்கவைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வித்தியாலயத்தில் வெற்றிடமாக உள்ள அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மார்ச் 3 ஆம் திகதிக்கு முன்னர் அதிபர் பதவிக்குப் பொருத்தமானவர்கள் விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-152)

## ப. நோ. கூ. ச கிளைக்குழுத் தேர்தல்

அரியாலை, பெப். 29

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முப்பது கிளைகளுக்கு கிளைக்குழுக்களைத் தெரிவு செய்யும் தேர்தல் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையில் நடைபெற்ற இந்தத் தேர்தல் போட்டி இன்றி நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளைக்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து சங்கத்தின் பொதுச் சபை ஏப்ரல் முற்பகுதியில் கூடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. [இ-17]

## நூல் வெளியீடு

வலி.வடக்கு, பெப். 29

புத்தாயிரம் ஆண்டில் மல்லாகம் மகாவித்தியாயலம் 140 வருடம் பூர்த்தியடைவதையொட்டி மல்லாகம் மகாவித்தியாலய கணிதக் கழகத்தினால் நாளை புதன் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வலிகாமம் கல்வி வலய தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. வ. கணேசலிங்கம் தலைமையில் ''கணிதப் பூச்சரங்கள்'' என்றநூல் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது

இந்தவிழாவில்ஆசியுரையை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் வரவேற்புரையை கணித ஆசிரியர் சி. டி. பல்குணன் லாலாவும் வெளியீட்டுரையை வடக்கு-கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமியும் ஆய்வுரையை தீவக வலய கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனும் நிகழ்த்துவார்கள்.

(இ-86)

## தாமதமாகக் கிடைத்த பரீட்சை அனுமதி அட்டை

காரைநகர், செப். 29

கொழும்பில் கடந்த20 ஆம் திகதி நடைபெற்ற இந்துசமயக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் வரவேற்பாளர் பணிக்கு ஆள்சேர்ப்பதற்குரிய போட்டிப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை முடிந்து ஒரு வாரத்தின் பின்னரே யாழ். குடாநாட்டுப் பரீட்சார்த்திகளுக்குக் கிடைத்தது.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் இருந்து தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்ட இந்தப் பரீட்சை அனுமதி அட்டைகள் காலதாமதமாகவே கிடைத்ததால் குடாநாட்டுப் பரீட்சார்த்திகள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

(இ-8-73)

## மக்கள் குடியிருக்காத வீடுகள்

நெடுந்தீவு, பெப். 29

நெடுந்தீவு மேற்கு சாராப்பிட்டியில் வீடமைப்புத் திணைக்களத்தால் கட்டப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட பெரும்பாலான வீடுகளில் அதன் உரிமையாளர்கள் இதுவரை குடியேறவில்லை.

மலசலகூடம், கிணறு வசதிகள் அமைக்கப்படாமையும் மழை காலத்தில் இப் பகுதியில் வெள்ளம் நிறைந்து காணப்படுவதுமே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

சாராப்பிட்டி வீடமைப்புத் திட்டம் சுமார் 20 வருடங்களுக்கு முற்பட்டதாகும்.

(க-111)

## கலந்துரையாடல்

வலிகாமம் தெற்கு, பெப். 29

ஜி. ரி. சற் திட்டத்தின் கீழ் பாடசாலைப் புனருத்தாரண வேலைகள் தொடர்பான மீளாய்வு பற்றிய கலந்துரையாடல்கள் நாளை புதன்கிழமை காலை ஒன்பது மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறுள்ளன.

(இ-15)2

## காங்கேசனுக்கு

யாழ்ப்பாணம், பெப். 29

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரியும் சட்டத்தரணியுமான என். ஜீவேஸ்வரா நாளை புதன் கிழமை காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ளார்.

அத்துடன் கைதிகளின் உறவினர்களால் அவர்களுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் கடிதங்கள்ளயும் கையளிப்பார்.

(இ-10)

## செவிப்புலன் வலுவற்றோர் நிறுவனத்துக்கு

# கட்டடத்துடன் காணி பெற்றுத் தர யாழ். அரசாங்க அதிபர் வாக்குறுதி

நல்லூர், பெப் 29

யாழ்ப்பாண நகரின் முக்கிய பகுதியில் அரசாங்கத்துக்குச் சொந்தமான காணிகள் இல்லை. கட்டடத்துடன் கூடிய காணி ஒன்றை இந்த ஆண்டுக்குள் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும். அத்தோடு நீங்கள் திறமைக்கு ஏற்றவாறு தொழில் முயற்சிகளை மேற்கொள்ளவும் சாத்தியமான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு 'றாட்' நிறுவனத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய யாழ்ப்பாண அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் கூறினார்.

யாழ். சில்னர் மண்டபத்தில் 'றாட்' தலைவர் செ. செல்வக்குமார் தலைமையில் விழா நடைபெற்றது.

அரசாங்கஅதிபர் க. சண்முகநாதன் அங்கு பேசும் போது மேலும் கூறியதாவது:-

பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களுக்கும் நாங்கள் உதவிகள் செய்துள்ளோம். உங்களுக்கு இப்பகுதியில் அதிகம் உதவிகள் வழங்கப்படவில்லை. நான் பிரதேச செயலரிடம் உங்களது பிரச்சினைகள் குறித்து கேட்டுத் தெரிந்துள்ளேன்.

செயலக மட்டத்தில் ஏற்படுத்தக்கூடிய நல்வாழ்வுத் திட்டங்களின் மூலம் சுய முயற்சிக்கு உதவுவேன். நீங்கள் சமூகத்தில் ஒரு நல்ல நிலையில் வாழவேண்டும் — என்றார்.

தலைவர் செல்வக்குமார் தமது உரையில் கூறியதாவது:

இடம்பெயர்வை அடுத்து எமது சுய முயற்சிக்கான தொழிற் சாதனங்கள் தொலைந்தும் காணாமலும் போய்விட்டன. மீள வந்ததும் தொழில் செய்ய முடியாத நிலையில் எஞ்சிய சாதனங்களை விற்கவேண்டி ஏற்பட்டுவிட்டது. இன்று எமக்கு ஒரு காணி அவசரம் தேவை. எங்களது செயற்பாடுகள் தொழிற்பாடுகள் குறித்து உரையாடவும் ஒரு கட்டடம் தேவை. நீங்கள் காணி ஒன்றைப் பெற்றுத் தந்தால் நாங்கள் எம்மிடமுள்ள பணத்தில் ஒரு கட்டடத்தை அமைத்துக்கொள்ளுவோம் — என்று சொன்னார்.

நல்லூர் பிரதேச செயலரும் ''றாட்'' போதகருமான எஸ். வேல்முருகோன்பிள்ளை பேசும்போது கூறியதாவது:

சொந்தக் கால்களில் நின்று வாழ விரும்பும் உங்களது குறிக்கோள் தொடர்பாகத் திட்டப் பணிப்பாளருடன் கலந்துரையாடினேன், சுய தொழில் அபிவிருத்தி சம்பந்தமான நடவடிக்கைக்கு நிர்வாகச் சிக்கல்கள் இருந்தன. எனினும் மாவட்ட அடிப்படையில் உதவிகள் கிடைக்க முயற்சிப்பேன். மற்றவர்களைப் போல் சமுதாயத்தில் நீங்களும் வாழ வேண்டும். குறைபாடுகள் உங்களிடம் மட்டுமல்ல எல்லோரிடத்திலுமே உண்டு — என்றார்.

''றாட்'' முன்னாள் தலைவர் க. சண்முகநாதன் பேசும் போது கூறியதாவது:

திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள கிளைகள் எமக்கு உதவுவதாகக் கூறுகின்றன. கொழும்பைச் சேர்ந்த சிங்கள மக்கள் பலர் எமக்கு உதவி அளித்துள்ளனர். காணி ஒன்று கிடைக்கும் பட்சத்தில் கோழிப்பண்ணைகள், மாட்டுப்பண்ணைகளை அமைத்து எமது உறுப்பினர்களுக்குத் தொழில் வாய்ப்புக்களையும் வருமானம் பெறக்கூடிய வாய்ப்புக்களையும் ஏற்படுத்த முடியும்.

எமது ஆசிரியரிடம் அரச திணைக்கள அதிகாரிகள், தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் எமது மொழியைப் படித்து எம்முடன் உரையாடி எமது குறைகளைக் களைய முன்வரவேண்டும்— என்றார்.

'றாட்' தலைவர் முன்னாள் தலைவர் ஆகியோரின் உரைகளை ஆசிரியர் மகேந்திரசிங்கம் மொழி பெயர்த்தார்.

கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன. (அ-103)

### நாளை

மாசி 18

புதன்கிழமை

திதி: ஏகாதசி முழுவதும்

நட்சத்திரம்: பூராடம் நள்ளிரவு 12.27 வரை.

ஏகாதசி விரதம்

சுபநேரம்: 4.58—6.28

ராகுகாலம்: 12.28—1.58

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

மற்றவர்களுடைய துயரத்தைக் கண்டு இரக்கப்படுங்கள். ஆனால் உங்களுடைய சொந்தக் கஷ்டங்களை உங்[illegible]

- [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

அருளானந்தம் சாம்சன் என்பவரது விசேட அடையாள அட்டை (0902004838) கோண்டாவில் ஸ்ரேசனடியில் 26-2-2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ம. அருளானந்தம், ''சுமங்களா'' பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (74055)

புத்தூர் மேற்கு புத்தூர் எனும் இடத்தைச் சேர்ந்த இரத்தினம் புஷ்பலதா என்பவரது விசேட அ. அ. இல. 0300696 (22-02-2000) செவ்வாய்க்கிழமை புத்தூருக்கும் அச்சுவேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் புத்தூர் அம்பாள் புடைவையகத்தில் ஒப்படைத்துதவவும்.(74060)

### இறைச்சிக் கோழிகள் தேவை

இறைச்சிக் கோழிகள் உடன் தேவை. நல்லவிலை கொடுக்கப்படும். தொடர்பு: தனபாலசிங்கம், இல. 19, முருகேசர் ஒழுங்கை, [நல்லூர் வீடியோ சென்ரர் வளவு] முத்திரைச்சந்தையடி, நல்லூர். [74051]

### சோதிடம்

கணனி மூலம் தமிழில் ஜாதகங்களைத்துல்லியமாகக் கணிப்பதற்கும் பலனை அறிவதற்கும் எண் சோதிடம் பார்ப்பதற்கும் பிறந்த நேரம் திகதி, ஊர், பெயர் இவற்றுடன் தொடர்புகொள்ளும் முகவரி: க.கிருபானந்தக்குருக்கள், பருத்தித்துறை வீதி, கிராம்புவில், சாவகச்சேரி. T P., FAX 070-212300 (73928)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் பயில புதிய பிரிவு ஆரம்பமாகி உள்ளது. (புதன், வியாழன், சனி, ஞாயிறு காலை 11.30) ஆசிரியர் க. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426, (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (74030)

---

இலங்கை மின்சார சபையின்
சகல
மின் பாவனையாளர்களுக்குமான

## மின்தடை பற்றிய அறிவித்தல்

காங்கேசன்துறை—சுன்னாகம் மின் மார்க்கங்களில் அவசர வேலைகள் செய்யவிருப்பதனால் 2000-03-02 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

இதனால் தங்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்காக வருந்துகிறேன்.

பிரதேச மின் பொறியியலாளர்
இலங்கை மின்சாரசபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

'' சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும் ''

இலங்கை மின்சார சபை.

(சி/11231)

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு)
திருமதி கோமளா திருநாவுக்கரசு
அவர்களின் அன்பு மகன்

### திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)

637, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (சி/11229)

---

## நீங்காத நினைவஞ்சலி

**31 ஆம் நாள** | **36 ஆம் நாள்**



திருமதி
இராயப்பு மரியம்மா

மண்ணில்:- 1924 - 04 - 07
விண்ணில்:- 2000 - 01 - 30

புத்திரன் வருவான் என
புன்னகை பூத்திருந்தாய்!
புத்திரர்கள் அனைத்தும் விட்டு
புதிய இடம் சென்றாயோ?



அமரர் இராயப்பு
அந்தோனிப்பிள்ளை
(அன்ரனி, கொழும்பு)

மண்ணில்:- 1945 - 01 - 09
விண்ணில்:- 2000 - 01 - 25

வாழ்விடம் மறந்தோம்
கொண்ட உறவுகள் பிரிந்தோம்
மீண்டும் உன் வரவில் மிளிர்ந்திருந்தோம்
மீளாத இடம் நாடிப் போனீரோ?

மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டு பல வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 02, றக்கா வீதி,
இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். (சி-11230)

---

## வாழ்த்துகின்றோம்

அறுபதாவது அகவையை நிறைவு செய்யும்
எமது ஆசான்

### கலாநிதி சபா. ஜெயராசா

அவர்கள் என்றும் நலமுடன் வாழவும் அவரது கல்விப் பணி, சமூகப் பணிகள் சிறக்கவும் மனதார வாழ்த்திப் பணிகின்றோம்.

அவர்தம் மாணவர்கள்
யா/யூனியன் கல்லூரி,
மருதனார்மடம்.

(74064)

---

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் முன்னாள் அதிபர் இணுவையூர்

### வி. நாகையா

அவர்கள் வவுனியாவில் காலமான செய்தி அறிந்து எமது ஆழ்ந்த துயரத்தையும் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை, உடுவில்.

(சி/11228)

---

## மரண அறிவித்தல்கள்

### பண்டாரம் கந்தையா
(ஆச்சாரியார்)

பண்டத்தரிப்புச் சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பண்டாரம் கந்தையா ஆச்சாரியார் வவுனியாவில் (28-2-2000) நேற்றுக் காலமாகிவிட்டார். அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவராவார். இந்த அறிவித்தலைஉற்றார், உறவினர் அனைவருக்கும் அறியத் தருகின்றோம். துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

தகவல்:
க. இராசதுரை
(மைத்துனர்)

அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (74052)

### திருமதி பொன்னுத்துரை காமாட்சி
(குகன் ஸ்ரோர்ஸ் — பண்டாரவளை)

காரைநகர் கோவளத்தைச் சேர்ந்த திருமதி பொன்னுத்துரை காமாட்சி அவர்கள் பண்டாரவளையில் நேற்று (28—02—2000) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், இராசேந்திரம், அம்பிகைபாகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் கோகிலாவதி, மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (28—02—2000) நேற்று பண்டாரவளையில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. அம்பிகைபாகன்
(மகன்)

இல-11, மாமரத்தோட்டம்,
பண்டாரவளை.
T.P. Fax — 057-31337. (74058)

### திருமதி இராசையா சரஸ்வதி

கோணாமலை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைச் சேர்ந்த திருமதி இராசையா சரஸ்வதி (27—02—2000) ஞாயிற்றுக்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்ற பொன்னம்பலம் இராசையா (யாழ்.வைத்தியசாலை,சிற்றூழியர்) அவர்களின் அன்புமனைவியும் சுகுமாரன் (நல்லூர் ப.நோ.கூ.ச), நந்தகுமார் (கனடா), கமலலோசினி, மீனலோசினி, சர்வலோசினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28-2-2000) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
இ. சுகுமாரன்
(மகன்)

கோணாமலை வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (74061)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் அய்யாத்துரை பத்மநாதன்

தோற்றம் 23–09–1936 மறைவு 13–03–1999

திதி: 29–02–2000

ஆண்டு ஒன்று சென்றாலும் அன்புமுகம் மறந்திடுமோ?
அரவணைத்தே எம்மை விட்டுச் சென்றுவிட்ட
—மாயமென்ன!
கடலைப் போல் உம் நினைவு எமை தொடர்கின்றதே!
காலமெல்லாம் உம்நினைவால் வாடியே தவிக்கின்றோம்!
உள்ளத்தில் நிறைந்தே நீர் வாழ்கின்றீர் உத்தமனாய்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய மஞ்சவனப்பதி முருகனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்

**அன்பு மனைவி, மகன், மகள்மார், மருமக்கள், பேர்த்தி, சகோதரர், நண்பர்கள், உறவினர்கள்.**

மணியகாரன் வளவு,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (73565)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம்: 07 — 10 — 1916



மறைவு: 30 — 01 — 2000

## திருமதி மனோன்மணி ஐயாத்துரை

(யாழ்ப்பாணம் இல 3, சிறாம்பியடி ஒழுங்கையில் வாழ்ந்து சென்னையில் இறந்தவர்)

அன்னையர் தினம் இன்று எமக்கு
ஆனால் அன்னையே உனக்கு
அன்றாடம் தினம் வைக்க வேண்டும்
எண்மரைப் பெற்று ஏற்றத்துடன் வளர்த்தாய்
ஏறுபோல் நடை என்றும் உண்டு உனக்கு
வாழ்க்கையில் வசந்தமும் கோடையும் முடிந்து
இன்று இலையுதிர் காலம் உனக்கு
சருகுபோல் நீ சயனிப்பதைப் பார்க்க
சங்கடமாக இருக்கின்றது மனதுக்கு
ஆனாலும் முழுவாழ்க்கை வாழ்ந்துவிட்டாய்
முற்றுப்புள்ளி கிடையாது அதற்கு, ஏனென்றால்
உன் உதிரம்தானே உன்பிள்ளைகள்
உடலில் ஓடுகிறது; ஆகவே உன் வாழ்க்கையை
அவர்கள் தொடர்கதையாக்கிவிடுவார்கள்.

ஆக்கம் - **திருமதி கனகேஸ்வரி நடராசா**
(மகள் - கனடா)

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சகோதரி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

**இ. ஐ. கணேசலிங்கம் (மகன்)**
(ஓய்வு பெற்ற முகாமையாளர், மக்கள் வங்கி)
''ஜெயமகால்''
214. ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (740[illegible])

# கணவரைக்கைதுசெய்யவில்லை என பருத்தித்துறை முகாமில் கைவிரித்தனர்

## கொலை விசாரணையில் மனைவி சாட்சியம்

நெல்லியடி, பெப். 29

''எனது கணவரைத்தேடி பருத்தித்துறை இராணுவ முகாமுக்குச் சென்றேன். அவர்கள் தாம் அவரைக்கைது செய்யவில்லை என்று கூறிக் கைவிரித்து விட்டனர்''

இவ்வாறு 1998 ஜூலை 20 ஆம் திகதியன்று, பருத்தித்துறை இராணுவ முகாம் பகுதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட பொலிகண்டியைச் சேர்ந்த மிக்கேல் பிள்ளை—றோபேட் வெலிங்டன் (வயது 33) என்னும் குடும்பஸ்தரின் மரண விசாரணையில் சாட்சியமளித்த இறந்தவரின் மனைவியான கஸ்பார்றோஸ்மேரி (வயது 25) தெரிவித்தார்.

இவ் விசாரணை கடந்த புதன்கிழமை நண்பகல் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில், பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் நடைபெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த லெப்டினன்—விமல் விக்கிரமகே (வயது 32) என்பவரை, பலாலி இராணுவ பொலீஸ் அலுவலக சார்ஜன் சேனரட்னா நீதிமன்றில் ஆஜர் செய்திருந்தார். இறந்தவரின் மனைவி அங்கு தொடர்ந்து சாட்சியமளிக்கும் போது கூறியதாவது:

றொபேட் வெலிங்டன் ஆகிய எனது கணவரை நான் 1997 ஜூலையில் திருமணம் செய்தேன். திருமணத்தின் பின்னர் நானும் கணவரும் பொலிகண்டியிலும் செம்பியன்பற்றிலும் மாறி மாறி வசித்து வந்துள்ளோம். எனக்கு 98இல் ஆண்குழந்தை பிறந்தது. இவ்வேளையில் பொலிகண்டியிலிருந்த எனது கணவர் அடிக்கடி என்னைப் பார்க்கச் செம்பியன்பற்றுக்கு வந்து செல்வார்.

குழந்தை பிறந்து மூன்று மாத காலத்தின் பின் ''1998 ஜூலை 20 ஆம் திகதி பொலிகண்டியில் இருந்து நானும் குழந்தையும் வருகின்றோம்; நீங்கள் பருத்தித்துறை பஸ் நிலையத்தில் காத்திருங்கள்'' என்று அவருக்கு தகவல் தெரிவித்தேன். எங்களுடன் எனது தாயாரும் கூட வந்தார். பஸ்ஸிலிருந்து இறங்கிப் பார்த்த போது எனது கணவரை அங்கு காணவில்லை. செம்பியன்பற்றில் இருந்து பருத்தித்துறைக்கு நாம் வந்த பஸ்ஸில் பொலிகண்டியைச் சேர்ந்த வின்சன் துரைரட்ணம் என்பவரும் வந்தார். எனது கணவரை இராணுவம் பிடித்ததாக இங்கு (பருத்தித்துறையில்) கதைக்கின்றார்கள் என்று அவர் என்னிடம் சொன்னார்.

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் கணவரைக் காணாதபடியால் வின்சன் கூறிய விடயம் உண்மை என்பதை எண்ணிப் பருத்தித்துறை 524 பிரிகேட் முகாமுக்கு வின்சனுடன் சென்றேன்.

''உமது கணவரை நாம் கைது செய்யவில்லை. வேறு இராணுவ முகாமில் பிடித்தார்களோ தெரியாது. எதற்கும் எமது முகாம் பெரியவர் வந்த பின்னர்தான் முடிவு தெரியும்'' என்று அங்குள்ள இராணுவத்தினர் கூறினார்கள்.

அதன் பின் நான் பொலிகண்டி இராணுவ முகாமுக்குச் சென்றேன். அப்பொழுது ''உங்களது கணவனை பருத்தித்துறை இராணுவ முகாமில் கைது செய்து வைத்துள்ளனர்'' என்று அங்கு தெரிவித்தனர்.

எனது கணவர் கடற்றொழிலுக்குச் செல்லும் அனுமதிப் பத்திர இலக்கத்தைக் கூடக் கொடுத்திருந்ததாக நான் அறிந்தேன். பின்னர் நான் எனது மாமா, மாமி வீட்டுக்குப் பொலிகண்டிக்குச் சென்றேன்.

மறுநாள் — 1998 ஜூலை 21ஆம் திகதி காலை எங்களை பருத்தித்துறை இராணுவ முகாமுக்குச் சென்று அங்கு கையொப்பம் வைத்துவிட்டுக் கணவரைக் கூட்டிச் செல்லுமாறு பொலிகண்டி இராணுவத்தினர் அறிவித்திருந்தனர்.

இதனால் எனது மாமா, மாமி, கணவரின் தம்பி எட்வேட், எனது மைத்துனி புஷ்பராணி ஆகியோர் அன்று பருத்தித்துறை இராணுவ முகாமுக்குச் சென்றனர். அங்கு சென்ற எனது கணவரின் தம்பி எட்வேட் பொலிகண்டிக்கு எனது வீட்டுக்கு வந்து எனது கணவர் இறந்துவிட்டதாகச் சொன்னார். பின்னர் பொலீஸார் வந்து எங்களை மந்திகை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

நான் கைக்குழந்தையுடன் இருந்தபடியால், மந்திகை மருத்துவமனைக்குச் செல்ல

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வாசகர் திருமுகம்

## டிப்ளோமாப் பரீட்சை

பட்டப் பின் கல்வி டிப்ளோமா கல்விநெறி தேசிய கல்வி நிறுவனத்தினாலும் ஆசிரியர்களுக்கு நடத்தப்படுவது யாவரும் அறிந்ததே. வழமைபோல் இம்முறையும் முதலாம் வருட மாணவர்களுக்கான பரீட்சை பற்றித் தேசிய கல்வி நிறுவனம் அறிவித்துள்ளது. பரீட்சை இரு சனி, ஞாயிறு தினங்களிலும் வழமையாக நடைபெற்று வருகின்றது. அதாவது 4 பாடங்களில் முதலிரு பாடங்கள் முதல் சனி, ஞாயிறுகளிலும் அடுத்த இரு பாடங்களும் அடுத்த சனி, ஞாயிறுகளிலும் நடைபெறுவது வழக்கம். ஆனால் இம்முறை ஒரு சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் காலையும் மாலையும் பரீட்சை வைக்கப்போவதாக சில தகவல்கள். இது மிகவும் பொருத்தமற்றதாகும். இரு பாடங்களை ஒரே நாளில் எழுதுவது என்பது மிகவும் சிரமமானதாகும். அத்துடன் ஆசிரியர்களுக்கே இக்கற்கை நெறி நடத்தப்படுவதனால் பல சுமைகளின் மத்தியிலேயே இதனை அவர்கள் பயில்கிறார்கள். பரீட்சையை இவ்வாறு திட்டமிட்டது மிகவும் வேதனைக்குரியதாகும். எனவே இதனைச் சென்ற வருடத்தைப்போன்று இரு சனி, ஞாயிறுகளில் நடத்துவதற்கு பொறுப்பானவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என ஆசிரியர்கள் அங்கலாய்க்கிறார்கள்.

ஆசிரியர்கள் சார்பாக
**த. வேந்தன்**

## காலம் கடந்த ஞானம்

24–02–2000 'உதயன்' பத்திரிகையில் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்துக்கு நிரந்தர கட்டடம் அமைப்பதன் அவசியத்தை பிரதேச செயலாளர் குறிப்பிட்டது குறித்து செய்தி பிரசுரமாகியிருந்தது.

யாழ். மாவட்டத்தின் முக்கிய நகரான யாழ்ப்பாணத்தின் பிரதேச செயலகம் இவ்வளவு காலமும் தனக்குத்தேவையானசொந்தக்கட்டடத்தைக்கொண்டு இருக்கவில்லை. மாறாக காலத்துக்குக் காலம் பூனை குட்டிகளைக் காவிச் செல்வதுபோல வசதிகள் அற்று (இது பொதுமக்கள், அலுவலர் இருசாராருக்கும் பொருந்தும்) பல இடங்களில் தனது காரியாலயங்களை அமைத்து இயங்கி வருகிறது. தற்சமயம் கச்சேரியின் கட்டடத்தில் இதன் ஒரு பகுதியான கணக்கு பென்சன் கிளைகளும் ஏனையவை கச்சேரியின் முன்பாக உள்ள ஒரு தனியார் வீட்டிலுமாக இயங்குகிறது. இதனால் பொதுமக்களும் அலுவலர்களும் அடையும் சிரமம் சொல்லில் அடங்காது. குறிக்கப்பட்ட வீடு ஒரு குடும்பம் வாழ்வதற்காகக் கட்டப்பட்டதாகும். அப்படிப்பட்ட ஓர் இடத்தில் ஒரு பெரிய அலுவலகத்தைத் திணித்து அலுவலர்களும் பொதுமக்களும் திணறுவதைத்தான் காணமுடிகிறது. மழை பெய்தால் காரியாலயத்தினுள் குடை பிடித்துத்தான் நிற்கவேண்டும். ஒருவித அடிப்படை வசதிகளும் அற்ற சூழ்நிலையிலேதான் ஏனோ தானோ என்ற போக்கில் அது இயங்குகிறது!

பிறமாவட்டங்களில் நகரப் பிரதேச செயலகம் கச்சேரியுடன் இணைந்து வசதியான கட்டடத்தில் இயங்குவதைக் காணலாம். தற்போது கோப்பாய், சங்கானை போன்ற பின்தங்கிய இடங்களில் உள்ள பிரதேச செயலகங்கள் தங்களுக்குச் சொந்தக் கட்டடங்களை மக்கள் சக்தியுடன் கட்டியதும்தான் யாழ். பிரதேச செயலருக்கும் தங்கள் செயலகத்துக்கும் புதிய கட்டடம் அமைக்கவேண்டும் என்ற அவா தோன்றியுள்ளது. இது காலம் கடந்த ஞானம் என்றாலும் புதியவரும் இளையவருமான பிரதேச செயலருக்கு இந்த நல்ல யோசனை — அவா தோன்றியது வரவேற்கத்தக்கதே.

எனவே யாழ். பிரதேச செயலக நிர்வாகத்தினுள் வசிக்கும் தயாள சிந்தையுடைய பெருமக்கள், வர்த்தகர்கள், கல்விமான்க்ள் யாவரும் இணைந்து எமது பிரதேசத்தில் அமைந்துள்ள செயலகத்துக்கு சொந்தக் கட்டடம் அமைக்க உதவ வேண்டும் என்பதே எமது அவா. ''ஒரு கை தட்டினால் ஓசை வராது''. எனவே சகலரும் இணைந்துஇப்பெரும் கைங்கரியத்தைச்செய்ய முன்வர வேண்டும்.

யாழ்ப்பாணம். **எஸ். பாலன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வ.து)

## பாண் போறணை வாஸ் பதவி

சங்கானை ப. நோ. கூ. சங்க வெதுப்பகத்திற்கு அனுபவமுள்ள பாண்போறணை வாஸ் தேவைப்படுகின்றார். அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். தங்கள் விண்ணப்பத்தை பொதுமுகாமையாளர், சங்கானை ப. நோ. கூ. சங்கம். சங்கானை என முகவரியிட்டு அனுப்ப வேண்டும். விண்ணப்பம் ஏற்கும் முடிவுத் திகதி 10-03-2000 ஆகும். வேதனம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.

பொதுமுகாமையாளர்,
சங்கானை ப. நோ. கூ. சங்கம்.
(சி/11216)


## அறிவித்தல்

26 – 02 – 2000 அன்று உப்புத் தொழிலாளர் சம்பள விடயமாக கணக்காளர் செ. சீனிவாசகம் சகிதம் சங்க உபதலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் V.K ஜெகன் அவர்களுடன் கலந்துரையாடியதற்கிணங்க 97 — 98 ஆம் ஆண்டு சம்பளத்தை பங்குனி மாதத்திற்குள் பெற்றுத் தருவதாக உறுதிமொழி அளித்துள்ளார் என்பதை அறியத் தருகின்றோம். அத்துடன் 8 – 3 – 2000 அன்று கூட்டம் நடத்த இருப்பதால் பழைய இடத்திற்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

உபதலைவர்: திரு. சி. சின்னராசா
செயலாளர்: திரு. ச. கஜேந்திரராசா
பொருளாளர்: திரு. சி. சிவராசா

ஆனையிறவு உப்பள நலன்விருத்திச் சங்கம்
இல. 261, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
[74054]

## மனதார நன்றி தெரிவிக்கின்றோம்!

மணிவிழா, சேவைநலன் பாராட்டு விழாவினை ஒழுங்கு செய்த வட்டுக்கோட்டை வாழ் மக்களுக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு வாழ்த்துதல் தெரிவித்து மலர்மாலைகள் அணிவித்தவர்களுக்கும் வாழ்த்துப்பா மடல் இயற்றியவர்களுக்கும் வாசித்தளித்தவர்களுக்கும் பரிசில்கள் மற்றும் கேடயங்கள் வழங்கியவர்களுக்கும் தவில் கச்சேரிகளை ஒழுங்கு செய்தவர்களுக்கும் இசை நிகழ்ச்சியை நடத்தியவர்களுக்கும் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தவர்களுக்கும் ஆசியுரை மற்றும் வாழ்த்துரைகள் வழங்கிக் கௌரவித்தவர்களுக்கும் எனது நிகழ்வினைத் தலைமை வகித்து நடத்தியவர்களுக்கும் ஒட்லி மண்டபத்தினை அலங்கரித்தவர்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் 22-2-2000 அன்று ''கேக்'' வெட்டி மோதிரம் அணிவித்த ஆசிரிய நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

23-2-2000 அன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர் ஆளுநர் சபையினால் எனக்கு எடுக்கப்பட்ட பிரியாவிடை நிகழ்வினை ஒழுங்கு செய்தவர்களுக்கும் தவில் கச்சேரிகளை ஒழுங்கு செய்த நண்பர்களுக்கும் மயில்நடனம் பழக்கிய,ஆடிய மாணவிகளுக்கும் கவிதை, பேச்சுக்களை வழங்கியவர்களுக்கும் வாழ்த்துப்பா மடல் வாசித்து வழங்கிய கல்லூரி மாணவர்களுக்கும் ஆசியுரை, வாழ்த்துரைகள் வழங்கிய ஆசிரியர், அதிபர் அவர்களுக்கும் மற்றும் கல்லூரி இலச்சினை பொறிக்கப்பட்ட தங்கச் சின்னம் வழங்கிய நிர்வாகிகளுக்கும் மற்றும் மாலைகள் அணிவித்தும் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்த மாணவ மாணவிகளுக்கும் எனதும் எனது குடும்பம் சார்ந்ததுமான மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- திரு. திருமதி குணநாயகம் இராஜநாயகம்.
மானிப்பாய். (சி/11226)

## இதய அஞ்சலி

எமது கல்லூரியின் கூட்டுறவுச்சங்க ஆலோசகரும்
பழைய மாணவியுமான
யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் (கணக்காய்வு)
திருமதி கோமளா திருநாவுக்கரசு
அவர்களின் அன்பு மகன்

### திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் அகாலமரணம் அறிந்து துயருறுகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

– கூட்டுறவுச்சங்கம்
(74056) யாழ். இந்து மகளிர் கல்லூரி.

# விளையாட்டரங்கு

## வலைப்பந்தாட்டம்

வலி. வடக்கு, பெப். 29

யாழ். கல்விக்கோட்ட மட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய ஆடுகளத்தில் இடம்பெறும் வலைப்பந்தாட்டப் போட்டிகளில், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி 15, 17 வயதுப் பிரிவு அணிகள் கொழும்புத்துறை இந்து ம. வி. அணிகளுடனும் 19 வயதுப் பிரிவு அணி வேம்படி மகளிர் கல்லூரி அணியுடனும் மோதும். (இ-8-86)

★ ★ ★

கோப்பாய் கல்விக் கோட்ட மட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையில் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு அத்தியார் இந்துக் கல்லூரி ஆடுகளத்தில் இடம்பெறும் வலைப்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு.

**15 வயதுப் பிரிவு**

★ இடைக்காடு ம. வி. எதிர் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தி

★ சரவணபவானந்தா வித்தி. எதிர் சோமஸ்கந்தா வித்தி.

★ அச்செழு சைவப்பிரகாச வித்தி. எதிர் புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தி.

**17 வயதுப் பிரிவு**

★ நடராஜ இராமலிங்க வித்தி. எதிர் இடைக்காடு ம.வி.

★ ஆவரங்கால் மகாஜன வித்தி. எதிர் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தி.

★ உரும்பிராய்இ. க. எதிர் கோப்பாய் ம.வி.

**19 வயதுப் பிரிவு**

உரும்பிராய் இ. க. எதிர் சோமஸ்கந்தா கல்லூரி. (இ-8-4)

## கரபந்தாட்டம்

அச்சுவேலி, பெப். 29

கோப்பாய் கல்விக்கோட்ட மட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் கரபந்தாட்டப் போட்டிகளில் இன்று 19 வயதுப் பிரிவில் ஆவரங்கால் மகாஜன — கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான ஆட்டமும் 17 வயதுப் பிரிவினருக்கான மூன்றாம் இடத்துககான ஆட்டமும் இறுதி ஆட்டமும் இடம்பெறும். (இ-8-11)

**கணவரை....**

(9 ஆம் பக்கத் தொடர்)

வில்லை. அன்று பிற்பகல் 6.30 மணிக்கு எனது கணவரின் சடலம் பொலிகண்டிக்கு கொண்டுவரப்பட்டது.

எனது கணவரை நான் அடையாளம் கண்டு கொண்டேன். எனது கணவர் பயங்கரவாத இயக்கம் எதனுடனும் தொடர்பு கொண்டிருக்கவில்லை. அவர் ஒரு மீன்பிடித் தொழிலாளி ஆவார்.

காலஞ்சென்ற எனது கணவர் இறக்கும் வரை என்மேல் அன்பும் பாசமும் கொண்டிருந்தார். எனது கணவருடைய மரணம் எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்குத் தெரியாது—என்று குறிப்பிட்டார்.

குறுக்கு விசாரணையை சட்டத்தரணி திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் மேற்கொண்டார்.

விசாரணையை அடுத்த மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிவான், சந்தேக நபரான இராணுவ லெப்டி[illegible] இராணுவ [illegible] தில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிட்டார். (உ-109)

## இரண்டாவது ரெஸ்டில்
# அஸார், ரமேஷ் உள்ளே! ஜடேஜா, லக்ஸ்மன் வெளியே!!

புதுடில்லி, பெப். 29

இந்திய — தென்ஆபிரிக்க அணிகளுக்கு இடையில் நடைபெற்றுமுடிந்த மும்பாய் ரெஸ்ட் போட்டியை அடுத்து இந்திய அணியில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி தென்ஆபிரிக்க அணியுடனான இரண்டாவது ரெஸ்ட் போட்டிக்காக இந்திய அணியின் முன்னாள் தலைவர் முகமட் அஸாருதீன், சடகோபன் ரமேஷ் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். தென்ஆபிரிக்க அணியுடனான முதல் ரெஸ்டில் இந்திய அணியில் இடம்பெற்றிருந்த அஜய் ஜடேஜா, லக்ஷ்மன் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் தென்ஆபிரிக்க அணியுடனான ஐந்து ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடருக்கும் சார்ஜா கிண்ணத்துக்கான போட்டித் தொடருக்கும் சௌரவ் கங்குலி இந்திய அணிக்குத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சச்சின் டெண்டுல்கர் தென் ஆபிரிக்க அணியுடனான இரண்டாவது ரெஸ்ட் போட்டிக்கு மட்டுமே தலைமை வகிப்பார். (இ-8-4)

## உதைபந்தாட்டம்

வலி. வடக்கு, பெப். 29

யாழ். மாவட்ட கல்வி வலயங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டிகள் வருமாறு:

**16 வயதுப் பிரிவில்**

★ மல்லாகம் குளமங்கால் றோமன்கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் டிறிபேக் கல்லூரி.

**18 வயதுப் பிரிவில்**

★ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் எதிர் டிறிபேக் கல்லூரி. (இ-4-86)

## ஆஸி. அணி உபதலைவர் மன்னிப்புக் கேட்டார்

வெலிங்டன், பெப். 29

புகைப்பிடித்துக் கொண்டிருக்கும் போது தன்னைப் புகைப்படம் எடுத்ததுக்காக இரண்டு சிறுவர்களிடம் தரக்குறைவாக நடந்து கொண்டமைக்கு ஆஸி. அணியின் உபதலைவரும் சுழற்பந்து வீச்சாளருமான ஷேன் வோர்ன் மன்னிப்புக் கோரி உள்ளார்.

ஆஸி.—நியூஸிலாந்துஅணிகளுக்கு இடையில் நடைபெற்று மழை காரணமாகக் கைவிடப்பட்ட ஒரு நாள் போட்டியை அடுத்து ஷேன் வோர்ன் புகை பிடித்துக் கொண்டிருந்த போது இரண்டு சிறுவர்கள் அவரைப் புகைப்படம் எடுத்தனர்.

இதனை அவதானித்த அவர் சிறுவர்களிடம் புகைப் படச்சுருளைக் கோரி வாக்கு வாதப்பட்டுள்ளார்

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து ஷேன் வோர்ன் விடுத்த அறிக்கையில் 'சிறுவர்களிடம் நடந்து கொண்ட முறையில் ஏதாவது தவறுகள் இருப்பின் அதற்காக மன்னிப்புக் கோருகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

புகைப் பிடித்தலுக்கு எதிரான பிரசாரங்களுக்கு உதவி வரும் கம்பனி ஒன்றுடன் கடந்த வருடம் ஷேன் வோர்ன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டமை குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெட்

வலி. வடக்கு, பெப் 29

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளிடையே நடைபெற்றுவரும் 19 வயதுப் பிரிவுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் போட்டியில் இன்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் விளையாடவுள்ளன. (இ-4-86)

## கோட்டமட்டப் போட்டிகள்

வலிகாமம் தெற்கு. பெப். 29

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகள் பங்கு கொள்ளும் கோட்ட மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டி மார்ச் 2, 3, 7ஆகிய திகதிகளில் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் உதவிக்கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் தலைமையில் நடைபெறும். (உ-152)

## மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு புதிய பயிற்றுவிப்பாளர் நியமனம்

தோல்விகளால் துவண்டு கொண்டிருக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணியை வெற்றிப்பாதையில் இட்டுச்செல்லும் பொறுப்பு புதிய பயிற்றுவிப்பாளரான றோஜர் ஹாப்பரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி மற்றும் றோர்த்தம்ப்டன் ஷயர் பிராந்திய அணி ஆகியவற்றில் சகலதுறை ஆட்டக்காரராக மிளிர்ந்தவர் றோயர் ஹாப்பர். இவரது நியமனம் மேற்கிந்தியத்தீவுகள் அணியைப் பலப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

றோஜருக்கு உதவியாக மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளர் ஜேஃவ்டுஜொன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் கனிஷ்ட அணியின் முகாமையாளர் ரிச்சர்ட்ஸ்கெரிட் தற்போது சிரேஷ்ட அணிக்கான முகாமையாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## விண்ணப்பம்

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலைகளின் 19 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டி, உடற்பயிற்சிப் போட்டி ஆகியவற்றிற்கானபிரவேசவிண்ணப்பங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர், கோட்ட அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு உடுவில் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ-3-152)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லெண்ணத்தைக் காட்டும் விதத்தில் அரசாங்கம் இப்போது செயற்பட வேண்டும்

## மட்டக்களப்புப் பேரணியை அடுத்து ஜனாதிபதிக்கு மகஜர்

மட்டக்களப்பு,பெப்.29

தமிழ்மக்கள் மீது நல்லெண்ணத்தைக் காட்டும் ஒரு முயற்சியாக தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் சகல மனித உரிமை மீறல்களும் நிறுத்தப்படவேண்டும். யுத்தநிறுத்தத்தை உடன் நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும்.

- மட்டக்களப்பில் நேற்று நடந்த பேரணியை அடுத்து ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட மகஜரில் மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

புளொட், ஈ.பி.டி.பி., ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியன கூட்டாக நடத்திய இந்தப் பேரணியை அடுத்து ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்கள், 50ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சியில் இருந்த அரசாங்கங்களினால் திட்டமிட்ட முறையில் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளனர். இதன் விளைவுகளே இன்று நாடு எதிர்நோக்கும் யுத்தசூழ்நிலை ஆகும்.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முயற்சிக்கப்பட்டபோதெல்லாம் பேரினவாத சக்திகள் அவற்றைத் திட்டமிட்டுக் குழப்பி வந்துள்ளன.

தமிழ் பேசும் மக்கள் இனியும் அடக்கு முறைகளையும் துன்ப துயரங்களையும் தாங்கிக் கொள்ளும் நிலையில் இல்லை. சமாதான எதிர்பார்ப்போடு தமது அவல வாழ்க்கையை அவர்கள் நடத்துகின்றனர்.

இத்தகைய இக்கட்டான நிலையில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியாக நோர்வே அரசாங்கம் அனுசரணையாளராக வந்துள்ளது. இந்த நல்ல சந்தர்ப்பத்தை தொடக்கமாகக் கொண்டு அரசும புலிகளும பேச்சுவார்த்தை ஒன்றில் ஈடுபட வேண்டும். தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சமாதானத்தைக் கொண்டுவரச் செயலாற்ற வேண்டும்.

எமது கோரிக்கைகள் வருமாறு:-

★ சமாதானச் சூழல் உருவாக நோர்வே அரசின் அனுசரணையோடு அரசும் புலிகளும் உடனடியாக பேச்சவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.

★ இந்த சமாதான முயற்சியில் ஈடுபாடு கொண்டு செயலாற்றி வரும் நோர்வே அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயற்படும் பேரினவாத சக்திகள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ ஆளும் கட்சி தீர்வு முயற்சி ஒன்றில் ஈடுபடும்போது எதிர்க் கட்சிகள் அதனைச் சீர்குலைக்கும் முயற்சிகளிலேயே கடந்த காலங்களில் ஈடுபட்டு வந்துள்ளன. அத்தகைய போக்கைக் கைவிட்டு அரசும் பிரதான எதிர்கட்சியான ஐ.தே.கட்சியும் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக ஒன்றுபட்டு ஒத்துழைக்க வேண்டும்.

★ மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள 'பாஸ்' நடைமுறையைக் கைவிட வேண்டும்.

★ தமிழ் மக்களிடையே நல்லெண்ணத்தைக் காட்டும் ஒரு முயற்சியாக, தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்படும் சகல மனித உரிமை மீறல்களும் நிறுத்தப்பட வேண்டும். உடனடியாக யுத்த நிறுத்தம் ஒன்று நடைமுறைக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-4-9-21)

# அநுராதபுரம் நீதிமன்றிலிருந்து யாழ். மன்றுக்கு 11 வழக்குகள்

யாழ்ப்பாணம்,பெப்.29

குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்து படையினரால் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அனுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டவர்களில் மேலும் 11 பேரின் வழக்குகள் யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்கு மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ். நீதிமன்றத்துக்கு வழக்குகள் மாற்றஞ் செய்யப்பட்டவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

கோகிதராசா சிவாநந்தராசா (சண்டிலிப்பாய் கிழக்கு), யேசுதாசன் ஜெயராஜ் (யாழ். ஐந்து சந்தி), சாந்தலிங்கம் மாலினி (ஆனைக்கோட்டை, பழைய பொலீஸ் நிலைய வீதி), இராசரட்ணம் மலர்மதி (அளவெட்டி), அருமைத்துரை தவச்செல்வம் (கரணவாய் மத்தி), சின்னத்துரை பாக்கியநாதன பாஸ்கரன் (முழங்காவில், நாச்சிக்குடா), தங்கத்துரை ஜெயாகரன் (முழங்காவில், நாச்சிக்குடா), அருமைத்துரை கிருஷ்ணகுமார் (கோண்டாவில் வடக்கு), கந்தசாமி சிவகுமார் (யாழ். குருசெட்டி ஒழுங்கை), கதிர்காமத்தையன் கலாயுதன் (மீசாலை வடக்கு), கைலாசபிள்ளை சிவகுமார் (மீசாலை வடக்கு).

மேற்படி சந்தேக நபர்களை எதிர்வரும் ஏப்ரல் 24 ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார். (உ-9)

# புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.29

ஸ்ரீராமகிருஷ்ண - விவேகானந்த புத்தகக் கண்காட்சி நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி. வி.பசுபதிப்பிள்ளை கண்காட்சியை ஆரம்பித்துவைப்பார். (உ-7)

# நீதிமன்றத்தில் ஆஜரான அதிபர்

நெல்லியடி,பெப்.29

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் 5ஆம் ஆண்டு மாணவி ஒருவர் பாடசாலையிலிருந்து விலக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக, மேற்படி கல்லூரி அதிபர் நேற்றுக்காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் பிரசன்னமானார்.

அங்கு இது தொடர்பாக விளக்கமளித்த அதிபர், எச்சந்தர்ப்பத்திலும் குறித்த மாணவியைப் பாடசாலைக்கு வர வேண்டாம் என்று தான் கூறவில்லை என்றும் -

அந்த மாணவி, தானாகவே பாடசாலைக்கு வராது விட்டுள்ளார் என்றும் -

நீதிவானிடம் தெரிவித்ததையடுத்து, அதிபரை செல்லுமாறு நீதிவான் பணித்தார்.

அதிபர் சார்பில் சட்டத்தரணி ஏ.கே.நடராஜா ஆஜரானார். (உ-109)

# இரண்டாவது இன்னிங்ஸில் பாக். 4 விக்கெட்டுகளுக்கு 154

ராவல்பிண்டி,பெப்.29

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் ராவல்பிண்டியில் நடைபெறும் முதலாவது ரெஸ்ற்றின் மூன்றாவது நாளான நேற்று ஆட்டநேர இறுதியில் பாகிஸ்தான் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது.

முன்னதாக, 8 விக்கெட்டுக்களை இழந்து 290 ஓட்டங்கள் என்ற நிலையில் நேற்றுக் களமிறங்கிய இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸில் 353 ஓட்டங்களைப் பெற்றது. சமிந்த வாஸ் ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்களையும், சொய்ஸா 26 ஓட்டங்களையும் விளாசினர். வக்கார் ஜ்"னுஸ் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி நேற்று ஆட்ட நேர இறுதியில் 4 விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது. சயீட் அன்வர் 84 ஓட்டங்களைப் பெற்றார். சொய்ஸா 2விக்கெட்டுக்களையும், வாஸ், முரளி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நான்காவது நாள் ஆட்டம் இன்று தொடரும். (உ-3)

# இனப்பிரச்சினை வேறு; யுத்தம் வேறு அல்ல!

## இரண்டும் ஒன்றே என்கிறார் மதன்

"இனப்பிரச்சினை வேறு - யுத்தம் வேறு அல்ல; இரண்டையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது. எனவே நோர்வேயின் சமாதான முயற்சிகளினூடக இலங்கை அரசும் புலிகளும் பேச்சுக்களில் உளப்பூர்வமாக ஈடுபட்டு, யுத்தத்தை நிறுத்தி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, நிரந்தர அமைதியை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் இன, மொழி, கட்சி வேறுபாடின்றி ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

- இவ்வாறு மக்கள் ஜனநாயகப் பேரவையின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இ.இராமேஸ்வரன் (மதன்) தெரிவித்துள்ளார்.

"சமாதானமும் சுகவாழ்வும் உருவாவதற்கான சூழ்நிலைகள் ஏற்பட்டு வருகின்றன. யுத்தம் முடிவுக்கு வரவேண்டுமாயின் புலிகளுடன் பேசவேண்டும் என்பது 'உள்ளங்கை நெல்லிக்கனி'. அதற்கான புரிந்துணர்வு, நம்பிக்கை என்பவற்றை இருதரப்பிலும் ஏற்படுத்துவதற்கு நோர்வே அரசு எடுத்திருக்கும் முயற்சியை நாம் வரவேற்கின்றோம்" - என்றும் அவர் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கின்றார். (உ)

# விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம்,பெப்.29

யாழ்.குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 28ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

**சங்கானை**

(136044ஏ),(129087ஏ),(129087பி),(131600ஏ),(131635ஏ),(131635பி),(131635சி),(131635டி),(131833ஏ),(131833பி),(134704ஏ),(134705ஏ),(135576ஏ),(135587ஏ),(135755ஏ),(135788ஏ),

**கோப்பாய்**

(134092ஏ),(134548ஏ),(134548பி),(136251ஏ),(136251பி),(136264ஏ),(136264பி),(136267ஏ),(136270ஏ)(136270பி),(136294ஏ),(136294பி),(136717ஏ),(136717பி),(136719ஏ),(136719பி),(136759ஏ),(136774ஏ),(136774பி),

**நல்லூர்**

(133248ஏ),(136043ஏ),(136769ஏ),(130774ஏ),(130774பி),(131665ஏ),(131753ஏ),(135593ஏ),(135593பி),(135614ஏ),(135614பி),(135711ஏ),(135748ஏ),(135792ஏ),(135802ஏ),(135825ஏ),(135825பி),(135897ஏ)(135897பி)

**சண்டிலிப்பாய்**

(136040ஏ),(136041ஏ),(135855ஏ)

**தெல்லிப்பழை**

(136778ஏ),(131591ஏ),(131653ஏ)(134519ஏ),(135671ஏ),(135671பி),(135761ஏ)

**உடுவில்**

(130567ஏ),(130567பி),(130586ஏ),(130586பி),(130721ஏ),(130721பி),(135555ஏ),(135555பி),(135617ஏ),(135638ஏ),(135639ஏ),(135683ஏ),(135769ஏ),(135769பி),(135769சி),(135769டி),(135772ஏ),(135772பி)(135805ஏ),(135811ஏ),(135907ஏ),(135907பி),(138140ஏ),(138140பி)

# முன்பள்ளிகளை பதிவுசெய்தல்

யாழ். கல்வி வலயத்தில் செயற்படும் முன்பள்ளிகள் யாவும் வலயக் கல்விப் பணிமனையில் பதிவு செய்திருத்தல் வேண்டும் எனவும் -

இதுவரை பதிவைமேற்கொள்ளாதிருக்கும் முன்பள்ளிகளும் தற்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள முன்பள்ளிகளும் யாழ். வலயக் கல்விப் பணிமனையில் தம்மை பதிவுசெய்து கொள்ளுமாறும் - வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.


'வாழ்வளிக்கும் வார்த்தையில் ஒன்றிப்போம்'

திருச்சபையின் ஆயர்கள் கலந்துகொள்ளும்

**ஒன்றிப்பு வழிபாடு**

இடம்: பரியோவான் கல்லூரி பீற்றோ மண்டபம்

காலம்: 29.02.2000 செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 - 5.30

நிகழ்ச்சி நிரல்

3.30 * பாடல் - ஆயர்கள் ஒளியேற்றல்
* பாடலும் பிரார்த்தனையும் - அங்கிலிக்கன் சபை
* நற்செய்தி நூல்களூடாக "ஒன்றிப்பு" ஆயர் கெனத் பெர்னான்டோ
* பாடலும் பிரார்த்தனையும் - இரட்சன்யசேனை
* பாடலும் பிரார்த்தனையும் - கத்தோலிக்க சபை
* திருத்தூதர் பணி நூலூடாக "ஒன்றிப்பு" ஆயர் தோமஸ் சௌவுந்தரநாயகம்
* பாடலும் பிரார்த்தனையும் - தென்னிந்திய சபை
* திருமுகங்களூடாக "ஒன்றிப்பு" ஆயர் சு.ஜெபநேசன்
* பாடலும் பிரார்த்தனையும் - மெதடிஸ்த சபை
* பாடல்
5.30 * ஆசீர்வாதம்

அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்

அருள் பிதா ஜே.ஈ.ஜெயசீலன்
தலைவர்
ஒன்றிப்பு ஆணைக்குழு
யாழ். மறைமாவட்ட - கத்தோலிக்க திருச்சபை.

அருள் பிதா ஏ.ஏ.போல்
தலைவர்
யாழ். கிறிஸ்தவ ஒன்றியம்

(74032)



உ

விராட் விஸ்வப்பிரம்மனே நம

**பூப்புப் புனித நீராட்டு விழா அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் மாசித் திங்கள் 18 ஆம் நாள் (01-03-2000) புதன்கிழமை (நாளை) காலை 9.28 மணி முதல் 10.00 மணி வரையில் வரும் சுபமுகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி

**தசாயினி (சாயினி) அவர்களுக்கு**

பூப்புப் புனித நீராட்டுவிழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

557(1035), கே.கே.எஸ். றோட்,
நாச்சிமார்கோவிலடி, மதவடி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
திரு திருமதி இரத்தினம் சிவமூர்த்தி குடும்பத்தினர்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக பெருமிதத்துடன் ஏற்றுக்கொள்ளவும்.
-நன்றி-

(C/11217)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# திருக்கேதீஸ்வரத்திலிருந்து ராணுவத்தை விலக்குங்கள்!

## ஜனாதிபதிக்கு மாவை நேற்றுக் கடிதம்

வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கேதீஸ்வரம் ஆலயச்சூழலில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் உடனடியாக அங்கிருந்து வாபஸ் பெறப்பட வேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நேற்று அனுப்பிய கடிதம் ஒன்றில் கேட்டுள்ளார்.

இராணுவத்தினர் ஆலயச் சூழலில் இருந்து வெளியேற்றப்படுவதுடன் எக்காரணம் கொண்டும் மீண்டும் அவர்கள் ஆலயச்சூழலில் பிரவேசிக்காதிருக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும்-

மாவை சேனாதிராஜா எம்.பி. ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் கேட்டுள்ளார்.

அண்மையில் படையினரின் அனுமதியுடன் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் சேதங்கள் பற்றிய விவரங்களைச் சேகரிப்பதற்காகச் சென்றிருந்த ஆலயத்தின் புனரமைப்புக் குழுத் தலைவர் சமர்ப்பித்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா இந்தக் கடிதத்தை எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போதைய இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இந்துக்களின் புராதன புனிதம்மிக்க தலமான திருக்கேதீஸ்வரம் மிகப் பாரிய சேதம் அடைந்துள்ளது.

ஆலயமும், அதனைச்சூழவுள்ள பகுதிகளும் இராணுவ முகாமாக மாற்றப்பட்டுள்ளது. ஆலயத்தின் வசந்தமண்டபம் படையினரின் தங்குமிடமாகவும், படுக்கை அறையாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

தீர்த்தக் கிணறு படையினரால் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக குளிப்பதற்கும், ஆடைகளைக் கழுவுவதற்கும் தீர்த்தக் கிணறே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஆலயத்தின் மேற்குப் பகுதி படையினரின் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சிபெறும் தளமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் அண்மையில் ஆலயத்துக்குச் சென்றிருந்த புனரமைப்புக் குழுத் தலைவருக்கு ஆலய மேற்கு வீதிக்குச் செல்லப் படையினர் அனுமதி வழங்கவில்லை.

ஆலயத்தைச்சூழ்ந்துள்ள பகுதிகள் அனைத்தும் தோண்டப்பட்டுள்ளன. தேர்முட்டியின் கீழ்ப்பகுதி இராணுவத்தினரின் பதுங்குகுழியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆலயத்தில் உள்ளபழமைவாய்ந்த பஞ்சலோகத்தினாலான சிம்ம வாகனத்தின் மூன்றாவது கண் அநாகரிகமான முறையில் பிடுங்கப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக ஆலயத்துக்கு 5 கோடியே 70 இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

இதற்கிடையில் வடமாகாண மீள்குடியேற்ற அதிகாரசபை மேற்படி ஆலயத்தின் புனரமைப்புக்கென 35 இலட்சம் ரூபாவைத் தருவதென முன்னர் தெரிவித்திருந்தது. தற்போது பத்து இலட்சம் ரூபாவைத் தந்துவிட்டு மேலும்நிதி தரமுடியாது எனக் கூறிவிட்டது.

எனவே அச்சபையுடன் தொடர்பு கொண்டு நிதிகிடைக்க ஜனாதிபதி என்ற வகையில் நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் படையினரின் அழிவு வேலைகளை விசாரிக்கவும் வழங்கக்கூடிய நிவாரணம் குறித்து சிபாரிசு செய்யவும் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-7)

## யாழ்.அமெச்சூர் சங்கத்துக்கு அங்கத்துவம்

யாழ்ப்பாணம்,பெப்.29

யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வன்மை சங்கத்துக்கு, ஸ்ரீலங்கா மெய்வன்மை சங்கத்தில் அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று கொழும்பில் நடந்த ஸ்ரீலங்கா மெய்வன்மை சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தில் இது குறித்து முடிவு செய்யப்பட்டது. இதுவரைகாலமும் யாழ். சங்கத்துக்கு பார்வையாளர் அந்தஸ்தே வழங்கப்பட்டிருந்தது. இப்போது முழு அங்கத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட மெய்வன்மைச் சங்கத்துக்கு பார்வையாளர் அந்தஸ்து வழங்குவது என்று நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(உ)

## மூவர் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.29

கடந்தவாரம் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டவர்களில் மூவர் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். உரும்பிராய் மேற்கு, சிவகுல வீதியைச் சேர்ந்த தர்மபாலன் தர்சன், உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த சிவலிங்கம் பிரபாகரன் ஆகிய இருவரும் கடந்த 26ஆம் திகதியும் - உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த வில்லியம் மேதர் கடந்த 27ஆம் திகதியும் விடுவிக்கப்பட்டனர்.

## படிவ விநியோகம்

99/2000ஆம் கல்வி ஆண்டுக்கு பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கான விண்ணப்பப்பத்திரங்கள் நாளை புதன்கிழமை முதல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் யாழ்.முகவர் நிலையமான பூபாலசிங்கம் புத்தகசாலையில் வைத்து விநியோகம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## இளைஞன் கைது

பலாலி வீதி திருநெல்வேலியில் வீடியோக்கடை வைத்திருக்கும் பாலச்சந்திரலால் பிரதீபன் (வயது 22) என்ற இளைஞன் 25ஆம் திகதி இரவு 8.30மணியளவில் மேற்படி கடையில் வைத்து ஊரெழு முகாம் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டதாக உறவினர்களினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## மகளிர் தினம்

கோப்பாய் ஆசிரிய கலாசாலை சமூகக்கல்வி மன்றம் நடத்தும் சர்வதேச மகளிர் தினம் நாளை புதன்கிழமை காலை 9.00மணிக்கு நடைபெற உள்ளது. மன்றத் தலைவர் ச.தவநேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலிகாமம் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் கலந்துகொள்வார். (இ-133)

## 4 யுத்தக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதிகளும் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனால் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களும் ஏனைய 11 யுத்தக் கைதிகளும் தம்மை விடுவிப்பதற்கு அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி இந்த மாத ஆரம்பத்தில் இருந்து உண்ணாவிரதம் இருந்து வந்தனர் என்பதும்-

பின்னர் அரசு இதுகுறித்து நடவடிக்கை எடுப்பதற்கு 15 நாள் அவகாசம் வழங்கி கடந்த வெள்ளியன்று தமது உண்ணாவிரதத்தை தற்காலிகமாகக் கைவிட்டிருந்தது என்பதும் தெரிந்தவையே.

விடுவிக்கப்பட்ட யுத்தக் கைதிகளும் காவலில் உள்ள கைதிகளின் உறவினர்கள் 28பேரும் நேற்று இரவு வவுனியாவுக்கு வந்து சேர்ந்தனர்.

அவர்களை வவுனியாவுக்கு அழைத்துவந்த செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுப் பிரதிநிதிகள் விடுவிக்கப்பட்ட படையினரை வவுனியாவில் உள்ள இராணுவ உயரதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

பின்னர் அவர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு விசாரணைகளை எதிர்நோக்குவர் என்று சொல்லப்பட்டது.

அதேசமயம் -

விடுதலைப் புலிகளின் காவலில் இன்னும் 11 படையினரும் 12 பொது மக்களும் இருப்பதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பேச்சாளர் ஹர்ஷ குணவர்த்தனா தெரிவித்தார்.

புலிகள் இந்த நான்கு யுத்தக் கைதிகளையும் விடுவித்துள்ளதை அடுத்து ஏனைய கைதிகளை விடுவிப்பதற்காக அரசு புலிகளுடன் [illegible] உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-6-7-8)



# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 10 - 12 - 1917

மறைவு 31 - 01 - 2000

## அமரர் செல்லப்பா ஐயாத்துரை

31-01-2000அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர், அன்புத் தெய்வம் செல்லப்பா ஐயாத்துரை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (01-03-2000) புதன்கிழமை பகல் 9-00 மணி தொடக்கம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நண்பகல் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு சகல வழிகளிலும் உதவிகளைச் செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்து விநியோகித்து எமது துக்கத்தில் பங்குபற்றியவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குலம் கிறீம் ஹவுஸ்,
ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.

(C/11171)

# முற்றவெளி நினைவுத் தூண்களை சுற்றிவர சிறு மதில் அமைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.29

தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தவர்களின் நினைவாக யாழ். முற்றவெளியில் நிறுவப்பட்டுள்ள நினைவுத் தூண்களைச் சுற்றி சிறு சுற்று மதில் அமைக்கப்படவுள்ளது.

இதற்காக யாழ். மாநகர சபையினால் 26ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இந்தப் பகுதி யாழ். மாநகர சபை ஊழியர்களினால் கடந்த சில தினங்களாக சுத்தம் செய்யப்பட்டு வருகிறது.

# பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாக மொழிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,பெப்.29

யாழ். குடாவிலுள்ள இளைஞர் யுவதிகளிடையே மொழி அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். அலுவலகத்தினால் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக மொழிப் பயிற்சி தேர்ச்சி வகுப்புகள் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கோப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை, கரவெட்டி, உடுவில், வேலணை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் 300 இளைஞர், யுவதிகள் இந்த வகுப்புக்களில் கலந்து கொண்டு பயனடைந்து வருகின்றனர்.

ஆறு மாதங்களை உள்ளடக்கிய இந்தப் பயிற்சி வகுப்புகளின் இறுதியில் தேசிய மட்டத்தில் பரீட்சைகள் நடத்தப்பட்டு சித்தியடைபவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

கடந்த வருடம் 150 இளைஞர், யுவதிகளுக்கு மொழியறிவுப் பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சியின் இறுதியில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் விரைவில் வழங்கப்படவுள்ளன.

(உ.-5)

## 2 வருடத்திற்கு முந்திய

# பழைய யோசனையையே ரணில் இப்போது சமர்ப்பிப்பு

அரசமைப்பு சீர்திருத்தத்துக்காக ஐ.தே.கட்சி தற்போது ஜனாதிபதிக்கு அனுப்பிய தீர்வு யோசனைகள் இரண்டு வருடங்களுக்கு முன்னர் அந்தக் கட்சி சமர்ப்பித்தவையே என்று இலங்கை வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

மூன்று சுதந்திர ஆணைக் குழுக்கள் அடங்கிய இந்த யோசனைகள் ரணில் விக்கிரமசிங்கவால் 1998ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முன்வைக்கப்பட்டவை ஆகும். ஜனாதிபதிக்கு ஒரு சில நாள்களுக்கு முன்னர் ரணில் அனுப்பி வைத்த அரசமைப்பு சீர்திருத்த யோசனைகளில் இவையே மீண்டும் ஓர் எழுத்து கூட மாற்றப்படாமல் இடம் பெற்றுள்ளன என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது - என்றும் அச்செய்தி மேலும் தெரிவித்தது. (உ-6)

## திருடர்கள் பிடிபட்டனர்

அளவெட்டி அலுக்கைப் பகுதியில் மக்கள் இல்லாத வீட்டில் இருந்து ஓடுகள் களவெடுத்து விற்பனை செய்ய முயன்ற மூன்று திருடர்கள் கையும்மெய்யுமாக பிடிபட்டனர். இவர்கள் மூவரும் அளவெட்டி கும்பலை என்னும் இடத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களை அப்பகுதி இராணுவ முகாமில் உடனடியாக ஒப்படைத்த அப்பகுதி பெரியவர் ஒருவர் ஓடுகளையும் மீட்டு இராணுவத்தினரிடம் கையளித்தார். பின்னர் மூவரும் திருடிய ஓடுகளுடன் சுன்னாகம் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## மெய்வன்மைப்.....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல் லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய விளையாட் டரங்கில் அதிபர் செல்வி தி.வேலுப் பிள்ளை தலைமையில் இடம்பெறும்.

முதன்மை விருந்தினராக கோட்டக்கல்வி அலுவலர் நா.சத்தியநாதனும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் க.சந்திரசேகராவும் கலந்துகொள்வார்கள். (உ-133)

## தம் உபகரணங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளங்கள் நேற்று நண்பகலளவில் அங்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

இதேவேளை குருநகர், பாஷையூர் மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் அதிகளவில் காணப்படும் வெளிச்சக்கட்டைக்கும் கல்முனைக்கும் இடைப்பட்ட கடற்பகுதியும் -

குருநகர் இறங்குதுறைக்கும் பண்ணைப் பாலத்துக்கும் இடையில் உள்ள கடற்பகுதியும் மீனவர்கள் தொழில் செய்ய தடைவிதிக்கப்பட்டுள்ளதாக படையினர் தரப்பில் கூறப்பட்டது என்று மீனவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.(உ-7-51)

# மரண அறிவித்தல்கள்

## அருட்செல்வி மேரி யூசேபியா சவிரிமுத்து (தி.கு)

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ். திருக்குடும்ப சபையின் துறவியுமாகிய அருட்செல்வி மேரி யூசேபியா சவிரிமுத்து நேற்று (28.02.2000) திங்கட்கிழமை யாழ். திருக்குடும்ப மாகாண இல்லத்தில் காலமாகிவிட்டார்.

அன்னாரது பூதவுடல் நாளை (01.03.2000) புதன்கிழமை காலை 8 மணிக்குத் திருக்குடும்ப மாகாண இல்லத்தில் இருந்து யாழ். புனித மரியாள் பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலிப் பூசையின் பின் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

திருக்குடும்ப மாகாண இல்லம்,
121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அருட்செல்வி அருள்
(C/11241)

## அருட்செல்வி மேரி ரெஜிஸ் செல்லையா

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருக்குடும்பக் கன்னியர் மடத்தைச் சேர்ந்த துறவியுமான அருட்செல்வி மேரி ரெஜிஸ் செல்லையா நேற்று (28.02.2000) திங்கட்கிழமை லோரிஸ் ரோட், பம்பலப்பிட்டியில் உள்ள திருக்குடும்ப இல்லத்தில் காலமாகிவிட்டார்.

அன்னாரது நல்லடக்கம் இன்று (29.02.2000) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4மணிக்கு கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

திருக்குடும்ப மாகாண இல்லம்,
121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அருட்செல்வி அருள்.
(C/11242)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29-02-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org